07TH
FEBRUARY
2025

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 02 | இதழ்: 68 | பக்கங்கள் - 14 | editor.uthayam@gmail.com



## பத்தாம் திகதி துபாய் புறப்படும் ஜனாதிபதி!

ஜனாதிபதி அனுர குமார திஸ ாநாயக்க எதிர்வரும் 20 ஆம் திகதி வியாழக்கிழமை உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு துபாய் நாட்டுக்குச் செல்லவுள்ளார். ஐக்கிய

02ம் பக்கம்பார்க்க...

# ட்ரம்பின் திட்டத்துக்கு உலகெங்கும் வலுக்கும் எதிர்ப்பு

## சீனா, ரஷ்யா உட்பட உலக நாடுகள் கடும் கண்டனம்

காஸா பிராந்தியத்தை கையகப்படுத்தும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் திட்டத்துக்கு உலகெங்கும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. வல்லரசு நாடுகளான சீனா,ரஷ்யா, மேற்கத்திய, ஆசிய, ஆபிரிக்க, அரபு நாடுகளும் ட்ரம்பின் திட்டத்துக்கு கடுமையான எதிர்பினை தெரிவித்துள்ளன.

அத்தோடு உலக நாடுகள் பலவற்றில் காஸாவில் இருந்து பலஸ்தீனர்களை வெளியேற்றும் ட்ரம்பின் திட்டத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.அமெரிக்காவின் சகல மாநிலங்களிலும் ட்ரம்பின் நடவடிக்கைகளுக்காக போராட்டங்கள் வெடித்துள்ளன.

மக்கள் வீதிகளில் இறங்கி போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

இதேவேளை பலஸ்தீனர்களின் எதிர்கால நலனுக்காகவே ட்ரம்ப் இத் திட்டத்தினை முன்னெடுக்கவுள்ளதாக அமெரிக்க வெளியுறச் செயலாளர் மார்க்கியோ ரூபின் தெரிவித்துள்ளார்.

இடிபாடுகளை அகற்றி காஸா பிராந்தியத்தை முழுமையாக கட்டியெழுப்புவதே அவரின் நோக்கமென்றும் அதன்பின் அதனை உலக மக்களின் பயன்பாட்டுக்கு அந் நகரம்

02ம் பக்கம்பார்க்க...



## மஹிந்தவின் மனு மார்ச் 19 ல் பரிசீலிப்பு!



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்க்ஷவுக்கு வழங்கப்பட்ட பாதுகாப்புப் படை

02ம் பக்கம்பார்க்க...

## சபாநாயகர், பிரதி சபாநாயகர் துருக்கி தூதுவர் சந்திப்பு!

துருக்கிக் குடியரசின் இலங்கைக்கான தூதுவர் செமி லுட்ஃபு துர்குட் (Semih Lütfü Turgut),

13ம் பக்கம்பார்க்க...

## நீதியான விசாரணை நடாத்தி லஸந்தவுக்கு நீதியை நிலை நாட்டுங்கள்

### பாராளுமன்றில் சஜித் கோரிக்கை!



லசந்த விக்ரமதுங்கவின் படுகொலைச் சம்பவம் தொடர்பில் எடுக்கும் நடவடிக்கைகள் குறித்து நான் கடந்த ஜனவரி மாதம் 8 ஆம் திகதி பிரதமரிடம் கேள்வி எழுப்பியிருந்தேன். இத்தகைய தருணத்தில், இது தொடர்பாக அண்மைக்காலமாக அரசாங்கம்

02ம் பக்கம்பார்க்க...

## அரச சேவைகளை டிஜிட்டல் மயமாக்கும் Gov pay திட்டம் இன்று ஆரம்பம்!

டிஜிட்டல் கொடுப்பனவு முறை 'Govpay' திட்டத்தை இன்று பெப்ரவரி 7 ஆம் திகதி

02ம் பக்கம்பார்க்க...

### கொரோனா ஜனாஸா எரிப்பு

## பாராளுமன்ற தெரிவுக்குழு அமைக்குமாறு கோரி இன்று தனி நபர் பிரேரணை

கடந்த ஆட்சியில் கொரோனா தொற்று என்ற பேரில் அநீதியாக எரிக்கப்பட்ட முஸ்லிம் ஜனாஸாக்கள் விவகாரம் சம்பந்தமாக அதனை விசாரிப்பதற்கான பாராளுமன்ற தெரிவுக்குழு ஒன்றை கோரும் பிரேரணை இன்று 06.02.2025 வெள்ளிக்கிழமை ஜூம்ஆ தொழுகைக்கு பின்னர் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்படவிருக்கிறது.

05ம் பக்கம்பார்க்க...

## டொனால்ட் ட்ரம்பை பதவி நீக்குங்கள்

### எலான் மஸ்கை செவ்வாய் கிரகத்துக்கு அனுப்புங்கள்

அமெரிக்க நகரங்களில் வெடித்துள்ள போராட்டம்





அமெரிக்காவில் ஜனாதிபதி டிரம்ப்புக்கு எதிராகவும் அவரது அரசில் முக்கிய

02ம் பக்கம்பார்க்க...

## ட்ரம்பின் கருத்துக்கு சவூதி எதிர்ப்பு!

### சுதந்திர பலஸ்தீனமே எதிர்பார்ப்பு



சுதந்திர பலஸ்தீனத்தை உருவாக்கிய பிறகே இஸ்ரேலுடன் தூதரக ரீதியிலான உறவை மேற்கொள்வோம் என்று சவூதி அரேபியா தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் - காஸா போர் நிறுத்த ஒப்பந்தத்துக்கிடையே வெள்ளை மாளிகையில்

02ம் பக்கம்பார்க்க...



## அரகலய தீ வைப்பு 43 எம்.பீக்களுக்கு

### 122 கோடி நஷ்டஈடு

அரகலய காலத்தில் தீ வைத்து அழிக்கப்பட்ட சொத்துக்களுக்கு நட்டஈடாக மொத்தம் 1.22 பில்லியன்

13ம் பக்கம்பார்க்க...

அமானா வங்கியில்
வாகன நிதியுதவி



உங்கள் வாகனத்துக்குரிய சாவியை
மிகவும் மலிவான மாதாந்த தவணைகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 1,933/-
ரூ.100,000க்கு வாடகை*

- குறைந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரை மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி
Amãna Bank

## பத்தாம்...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

அரபு இராச்சியத்தின் ஆட்சித் தலைவர் முஹம்மத் பின் சயீத் அல் நஹ்யானின் அழைப்பின் பேரில் அந் நாட்டுக்குப் புறப்பட்டுச் செல்லும் ஜனாதிபதி அரசுகளுக்கான உச்சி மாநாட்டிலும் பங்கேற்கவுள்ளார்.

எதிர்வரும் 13 ஆம் திகதி ஜவரை துபாயில் தங்கியிருக்கும் ஜனாதிபதி அந் நாட்டு ஆட்சியாளர் மற்றும் பிரதமர் அமைச்சர்களையும் சந்தித்து இரு தரப்பு விவகாரங்கள் குறித்து பேச்சுவார்த்தை நடாத்தவுள்ளார். இதேவேளை உச்சி மாநாட்டில் பங்கேற்கும் பல்வேறு நாடுகளின் அரசுத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கும் ஜனாதிபதி திட்டமிட்டுள்ளார்.

## மஹிந்தவின்...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

யினரின் எண்ணிக்கையை 60 ஆக குறைப்பதற்கான அரசாங்கத்தின் முடிவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுவை மார்ச் 19ம் திகதி பரிசீலிக்க உயர் நீதிமன்றம் தீர்மானம்.

இந்த மனு நேற்று (06) நீதிபதிகள் பிரீதி பத்மன் சூரசேன, ஜனக் டி சில்வா மற்றும் சம்பத் அபேகோன் ஆகிய மூவர் கொண்ட உயர் நீதிமன்ற அமர்வு முன் விசாரணைக்கு வந்தது.

## சர்வஜன கட்சியின் ஊடக செயலாளராக ஹஸன் அலி!

சர்வ ஜன கட்சியின் ஊடக செயலாளராக முன்னாள் அமைச்சர் நஸீர் அஹமட் இன் இணைப்பு செயலாளராக பணிபுரிந்த ஹஸன் அலி நியமிக்கப்பட்டுள்ளார்.

கட்சியின் தலைவர் திலித் ஜயவீர இந்நியமனத்தை வழங்கியுள்ளார். ஹஸன் அலி இதற்கு முன்பு பல அமைச்சுக்களின் இணைப்புச் செயலாளராக பணிபுரிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. கடைசியாக அவர் சுற்றாடல் அமைச்சர் நஸீர் அஹமட் இன் இணைப்பு செயலாளராக பணிபுரிந்தார்.

## ட்ரம்பின் கருத்துக்கு...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பை இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு நேற்று முன்தினம் (04) நேரில் சந்தித்துப் பேசினார்.

இதனைத் தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த ட்ரம்ப், காஸாவை கைப்பற்றி அமெரிக்க இராணுவத்தின் கண்காணிப்பின் கீழ் கொண்டு வரப்படும் என்று அறிவித்தார். அத்தோடு காஸா முனையில் உள்ள பலஸ்தீனியர்கள் எகிப்து மற்றும் ஜோர்தான் போன்ற மத்திய கிழக்கு நாடுகளுக்கு அனுப்பப்படுவர் என்றும் தெரிவித்தார்.

ட்ரம்பின் அறிவிப்பை எதிர்த்து, சவூதி அரேபிய வெளியுறவு அமைச்சரகம் ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

“பலஸ்தீனத்தில் சுதந்திரமான அரசை ஏற்படுத்துவதில் சவூதி அரேபியாவின் நிலைப்பாடு உறுதியானது, அதனை யாரும் மாற்ற முடியாது என்பதை வெளியுறவு அமைச்சரகம் உறுதிப்படுத்துகிறது.

கிழக்கு ஜெருசலேமைத் தலைநகராகக் கொண்டு சுதந்திர பலஸ்தீன நாட்டை உருவாக்க சவூதி அரேபியா தனது இடைவிடாத முயற்சிகளை தொடரும். இதனை ஏற்படுத்தாமல் இஸ்ரேலுடன் தூதரக உறவுகளை சவூதி அரேபியா ஏற்படுத்தாது.

இஸ்ரேலிய குடியேற்றக் கொள்கைகள் மூலம் நில இணைப்பு அல்லது பலஸ்தீன மக்களை அவர்களின் நாட்டுக்குள் இடம்பெயரச் செய்வதை சவூதி அரேபியா நிராகரிப்பதை மீண்டும் உறுதிபடுத்துகிறது” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ட்ரம்பின் திட்டத்துக்கு...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

கையளிக்கப்படுமென்றும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இடிபாடுகளாக இருந்தாலும் காஸா எமது இருப்பிடம்.இது எமது வாழ்விடம்.அமெரிக்கா அல்ல எந்த சக்தி வந்தாலும் நாம் இங்கிருந்து வெளியேற மாட்டோம் என பலஸ்தீன் மக்கள் உறுதி படத் தெரிவித்துள்ளனர்.நீண்ட கால யுத்தத்துக்குப் பின்னர் ஏறத்தாழ ஐந்து இலட்சம் பலஸ்தீனர்கள் காஸாவுக்குத் திரும்பியுள்ளனர்.

ட்ரம்பின் திட்டம் தொடர்பில் தனது கண்டனத்தை வெளியிட்டுள்ள சீன ஜனாதிபதி ஜீ பிங் “காஸா பலஸ்தீனர்களின் தாயகம்.அது அவர்களின் நிலம். அரசியல் ஒப்பந்தங்களால் பேரம் பேசும் பூமியல்ல காஸா “என்றும் கடுமையான கண்டனத்தை வெளியிட்டுள்ளார்.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் ட்ரம்புக்கு கடும் பதிலடி கொடுத்துள்ளார்.பலஸ்தீனர்களை அவர்களது தாயகத்திலிருந்து வெளியேற்ற ட்ரம்புக்கு எந்த அதிகாரமும் கிடையாது.தனது திட்டத்தை அவர் நிறுத்திக் கொள்ள வேண்டும்.இன்றேல் பயங்கர விளைவுகளை அவர் சந்திக்க நேரிடுமென்றும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

## நீதியான...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

எடுத்திருக்கும் நடவடிக்கைகள் என்ன? மற்றும் லசந்த விக்ரமதுங்கவின் படுகொலை தொடர்பில் அரசாங்கம் தலையிட்டு வெளிப்படையான விசாரணை நடத்த வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று (06) பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இது தொடர்பாக வெளிப்படையான விசாரணையை நடத்தி, அவர்களது குடும்பத்தினருக்கும் ஊடகவியலாளர்களுக்கும் நீதி நியாயத்தை நிலைநாட்டி, கொலையாளிகளை சட்டத்தின் முன் நிறுத்த நடவடிக்கை எடுங்கள்.

லசந்த விக்ரமதுங்கவின் கொலையாளிகளை கண்டுபிடிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் இங்கு மேலும் தெரிவித்தார்.

## அரச...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

ஆரம்பிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன் ஆரம்ப நிகழ்வு ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தலைமையில் நடைபெறவுள்ளது.

இலங்கையின் அரச சேவைகளை டிஜிட்டல் மயமாக்குவதற்கான ஆரம்ப கட்டமாக ‘புழசீயல’ திட்டம் ஆரம்பிக்கப்படுகிறது,

இந்த “முயற்சி அரச நிறுவனங்கள் பணம் செலுத்தும் முறையை நெறிப்படுத்தி நவீனமயமாக்கும், பாதுகாப்பான மற்றும் திறமையான டிஜிட்டல் தளத்தின் மூலம் தடையற்ற பரிவர்த்தனைகளை செயல்படுத்தும்” என அரசாங்கம் கூறுகிறது.

வருவாய் சேகரிப்பு செயல்முறைகளை நவீனமயமாக்குவதை நோக்கமாகக் கொண்டது இந்தத் திட்டம்.

GovPay ஆரம்பத்தில் 16 அரசு நிறுவனங்களை ஒருங்கிணைக்கும் என்று டிஜிட்டல் பொருளாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும் 30 நிறுவனங்கள் இரண்டு கட்டங்களில் இணைக்க திட்டமிடப்பட்டுள்ளதோடு ஏப்ரல் 2025 க்குள் முழுமையாக செயல்படுத்தப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

தொழில்நுட்ப பயன்பாடுகள் அல்லது ஒன்லைன் வங்கி தளங்கள் மூலம் அரச சேவைகளுக்கான கட்டணங்களைச் செலுத்த இந்த முறைமை பொதுமக்களுக்கு உதவும்.

இந்த முறைமையூடாக வீண்விரயம், மோசடிகளை தடுக்க முடியும் எனவும் அரச வருவாயை அதிகரிக்க முடியும் எனவும் டிஜிட்டல் புரட்சி இலங்கையில் ஏற்படுத்த முடியும் என்றும் அரசாங்கம் எதிர்பார்க்கிறது.

## டொனால்ட்...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

பதவி வகிக்கும் தொழிலதிபர் எலான் மஸ்க்குக்கு எதிராகவும் போராட்டங்கள் வெடித்துள்ளன.

அமெரிக்க அதிபராக பதவியேற்றுள்ள ட்ரம்ப் வெளிநாடுகள் மீதான நடவடிக்கைகள் தவிர உள்நாட்டிலும் அதிரடியான சீர்திருத்தங்களை மேற்கொண்டு வருகிறார். பிராஜக்ட் 2025 என்ற தலைப்பில் கருத்தடை மருந்துகளில் இருந்து கல்வித்துறை வரை நிதித்துறையிலிருந்து நீதித்துறை வரை இவர் அறிவித்துள்ள ஏராளமான நடவடிக்கைகள் அமெரிக்காவில் கடும் விமர்சனங்களுக்குள்ளாகியுள்ளன. வெளிநாடுகள் மீது ட்ரம்ப் தொடங்கியுள்ள வணிகப்போர் உள்நாட்டில் விலைவாசி உயர்வுக்கு வழிவகுக்கும் என அஞ்சப்படுகிறது.

இந்நிலையில் ட்ரம்ப்பையும் அவரது அரசில் செயல் திறன் மேம்பாட்டு துறையின் தலைவராக இருக்கும் தொழிலதிபர் எலான் மஸ்க்கையும் எதிர்த்து போராட்டங்கள் வெடித்துள்ளன. ட்ரம்ப்பை தகுதி நீக்கம் செய்ய வேண்டும், எலான் மஸ்க்கை செவ்வாய் கிரகத்திற்கு அனுப்ப வேண்டும் என்ற பதாகைகளை போராட்டக்காரர்கள் ஏந்தியிருந்தனர். குறிப்பாக தொழிலதிபரான எலான் மஸ்க்கிற்கு அதிக அதிகாரம் அளித்து விருப்பம் போல் செயல்பட அனுமதித்துள்ளது குறித்தும் போராட்டக்காரர்கள் குரல் எழுப்பினர்.







# ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் ஏற்பாட்டில்

## தென்பகுதிக்கான ஊடக மற்றும் சமூக நலன் கலந்துரையாடல்






ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் ஏற்பாடு செய்த தென்பகுதிக்கான ஊடக மற்றும் சமூக நலன் சார் கலந்துரையாடல் கடந்த ஞாயிறன்று வெலிகம அறபா தேசிய பாடசாலை மற்றும் காலி மல்ஹருஸ்ஸ/ல்ஹியா தேசிய பாடசாலை என்பவற்றில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

போரத்தின் தலைவர் என். எம்.அமீன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் மீடியா பேர செயற்குழு உறுப்பினர்களும் மாவட்ட அமைப்பாளர்களும் கலந்து கொண்டனர்.

மேற்படி பிரதேசத்திலுள்ள சமூக சேவை அமைப்புகளின் பிரதிநிதிகள்,பாடசாலை அதிபர்கள், உலமா சபை பிரதிநிதிகள், பள்ளி பரிபாலன சபை உறுப்பினர்கள் பிரதேச ஊடகவியலாளர்கள், எழுத்தாளர்கள், பாடசலை ஊடகக் கழக மாணவர்கள், சமூக ஆர்வளர்கள் போன்றோரின்பங்களிப்புடன் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

வெலிகம அறபா தேசிய பாடசாலையில் இரு அமர்வுகளாக இந்தக் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததோடு முதல் அமர்வில் மாத்தறை மாவட்டத்தில் இளம் ஊடகவியலாளர்களை ஊக்குவிப்பது பாடாசாலை மாணவர்களுக்கு பயிற்சி வழங்குவது, வாசிப்புத் திறனை அதிகரிப்பது, சிங்கள மொழிமூலம் செயற்படும் ஊடகவியலாளர்களை அடையாளங் கண்டு அவர்களை ஊக்குவித்தல் உட்பட பல முக்கியமான விடயங்கள் குறித்து ஆராயப்பட்டது. கல்வியலாளர்களும் ஊடாக ஆர்வலர்களும் இதன் போது கருத்துக்களை முன்வைத்தனர். சமூகம் சார்ந்த விடயங்களை அச்சு இலத்திரனியல் ஊடகங்களிலும் சமூக ஊடகங்களிலும் வெளிப்படுத்தி அவற்றிற்கு தீர்வு பெற்றுக் கொடுப்பதன் முக்கியத்துவம் பற்றியும் இதன் போது கருத்து முன்வைக்கப்பட்டது. இங்கு மாத்தறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அர்கம் இல்யாஸும் கலந்து கொண்டு கருத்து வெளியிட்டார்.

போரத்தின் தலைவர் என்.எம்.அமீன் தலைமை உரையையும், பொதுச் செயலாளர் ஸாதிக் ஷிஹான் வரவேற்பு மற்றும் அறிமுக உரையையும் நிகழ்த்தியதோடு உப செயலாளர் ஷம்ஸ் பாஹிம் நன்றியுரை வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து நடைபெற்ற பாடசாலை மாணவர்களுக்கான அமர்வில் ஊடகப் பயிற்றுவிப்பாளர்களான இஸ்பஹான் சஹாப்தீன்,ஜாவிட் முனவ்வர் ஆகியோர் கருத்துத் தெரிவித்தனர்.

தொடர்ந்து, உறுப்பினர்களுக்கும் பாராளுமன்ற உறுப்பினர் அர்கம் இல்யாஸுக்கும் இடையிலான விஷேட சந்திப்பு நடைபெற்றது. சமூகம் சார்ந்த பல்வேறு விடயங்கள் இதன் போது ஆராயப்பட்டது.

இதன் போது அமைப்பின் தலைவர் என்.எம்.அமீன் மொழிபெயர்ந்த உயிர்த்த ஞாயிறு அனர்த்தம் நூலின் பிரதிதிகள் முக்கியஸ்தர்களுக்கு வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. வெலிகம மற்றும் காலி நிகழ்வுகளை அமைப்பின் தேசிய அமைப்பாளர் இர்ஷாத் ஏ காதர் நெறிப்படுத்தினார்.

தென்பகுதி விஜயத்திற்கு தொழிலதிபரும் நலன்விரும்பியுமான எம்.ஏ.சி. மஹ்சூம் பிரதான அனுசரணை வழங்கியிருந்ததோடு டிரான்ஸ் மோபைல் உரிமையாளர் எம்.வை.எம்.முகர்ரம், டீன் பிரதர்ஸ் முகாமைத்துவப் பணிப்பாளர் நஜீப்தீன் ஆகியோரும் அனுசரணை வழங்கியிருந்தனர்.அமைப்பின் உப செயலாளர் ஷம்ஸ் பாஹிம் இந்த விஜயத்திற்கான ஏற்பாடுகளை முன்னெடுத்திருந்ததோடு மாவட்ட இணைப்பாளர்களான எம்.எப். பர்ஹான்,இஸ்பஹான் மற்றும் பிரதேச ஊடக ஆர்வலர்கள் அதற்கு ஒத்துழைப்பு வழங்கியிருந்தனர்.

# காதி நீதிபதிகளுக்கான 2 நாள் பயிற்சி கூட்டம்




2 நாள் பயிற்சி கூட்டம் 2025ம் ஆண்டு ஞாயிற்றுக்கிழமை, 26வது ஜனவரி மற்றும் திங்கள்கிழமை, 27வது ஜனவரி நாட்களில் கிரீன் எக்ஸ்பிரியன்ஸ் சென்டர், அன்னா கார்ட்ன், எலமல்தினிய, கந்டியில் அனைத்து காதி நீதிபதிகளுக்குமானதாக நடைபெற்றன.

இந்த நிகழ்ச்சி நீதி சேவை ஆணைகுழுவில் அறிவித்தலுடன்

இப் பயிற்சி கூட்டம் ஸ்ரீலங்கா காதி நீதவான்களின் சம்மேளனம் ஏற்பாடு செய்ததாகவும், ஸம் ஸம் பவுன்டேஷன் உதவியுடன் நடைபெற்றதாக தெரிவிக்கப்பட்டது.

தற்போது, இலங்கையில் மொத்தமாக 65 காதிகள் பணியாற்றுகின்றனர்,

இதில் 13 காதிகளின் பதவிகள் காலியாக உள்ளன.

52 குவாஜிகளில் 34 பேர் இந்த பயிற்சியில் பங்கேற்றனர்.

தேசிய ஒருங்கிணைப்பின் துணை அமைச்சர், ஷேக் முநீர் முலாஃபர் இந்த நிகழ்ச்சியில் பிரதான விருந்தினராகப் பங்கேற்றார்.

இந்த பயிற்சியின் முக்கிய அம்சங்களில் ஒன்று, மூட் கோர்ட் செயல்பாடுகள்(மாதிரி வழக்கு நடாத்தும் முறை) ஆகும், இதன் மூலம் காதிகள் செயலிலிருந்து கற்றுக்கொள்ள ஒரு பெறுமதி வாய்ந்த வாய்ப்பினைப் பெற்றனர். அவர்கள் தலாக் விவாகரத்து, பஸஹ் விவாகரத்து, பிள்ளை, மனைவி பராமரிப்பு, மற்றும் வலி பாதுகாவல் அனுமதி வழங்குதல் தொடர்பான வழக்குகளை கையாள்வது எப்படி என்பதைப் பற்றி விளக்கங்கள் பெற்றனர்.

இந்த பயிற்சி கூட்டம் பின்வரும் முன்னணி நபர்களால் நடத்தப்பட்டது:

- நத்வி பஹாதீன் யுயுடு, முன்னாள் காதிகள் சபை தலைவர்

ஸாபிர் சவாத் AAL, முன்னாள் காதிகள் சபை உறுப்பினர்

- அஷ் ஷேக் யு.டு.யு.ஆ. பவூஸ், ளுடுளுதுகு முன்னாள் தலைவர் மற்றும் மவானெல்லா காதி

ஸம் ஸம் பவுன்டேஷனின் தலைவர், அஷ் ஷேக் முஃப்தி யூசுப் ஹனீஃபா மற்றும் பயிற்சி இயக்குநர், ஷேக் அம்ஹர் ஹகம் தீன் இதில் உரையாற்றினர்.

மேலும், ஷகிரா மன்சூர், மனோதத்துவ ஆலோசகரும், குடும்பங்களில் உள்ள தற்போதைய பிரச்சனைகள் மற்றும் உறவுகளுக்குல் சமாதானம் எவ்வாறு ஏற்படுத்துவது என்பதற்கான பயிற்சி அளித்தார்.

இந்த பயிற்சி காதிகளுக்கு மிகவும் நேர்மையான விளைவுகளை அளித்தது, மேலும் பலர் எதிர்காலத்தில் தங்களின் அலுவல்களில் சிறப்பாக செயல்பட உறுதிமொழி கொடுத்தனர்.

மாநாட்டுத் தலைவர், எம். இஃபாம் யேஹியா டுடுடீ மற்றும் பொது செயலாளர், அம்ஹர் ஷரீப் யுயுடு ஆகியோர் நிகழ்ச்சியில் தங்களின் மதிப்புமிக்க கருத்துக்களை பகிர்ந்துகொண்டனர்.

ஸம் ஸம் பவுன்டேஷன் அனைவருக்கும் உணவும் மற்றும் தங்குமிட ஏற்பாடுகளை செய்தது.

தகவல்-
M. Ifham Yehiya



www.uthayam.lk
# உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

2025 FEBRUARY 07 - FRIDAY

WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

# சுதந்திர தினத்தில் அரசின் முன்மாதிரி

நாட்டின் 77 ஆவது சுதந்திர தினம் இச் செவ்வாய் அன்று எளிமையானதாகவும் அபிமானமிக்கதாகவும் கொண்டாடப்பட்டது. கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் ஜனாதிபதி அனுரகுமார திசா நாயக்க தலைமையில் இடம் பெற்ற சுதந்திர தின விழாவும் நாட்டின் ஏனைய பகுதிகளில் இடம்பெற்ற சுதந்திர தின விழாவும் வீண் விரயங்களை தவிர்த்து நடைபெற்று இருப்பது குறிப்பிடத்தக்கது. வழமையாக சுதந்திரத்தின் பேரில் பல்வேறு நிகழ்வுகளுக்கு பெருந்தொகையான பணம் செலவு செய்யப்படுகின்றது.

இம்முறை அவ்வாறான செலவுகளை குறைத்து சுதந்திர தின நிகழ்வுகள் அனுஷ்டிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. நாட்டின் பலரதும் பாராட்டுக்கள் அரசாங்கத்தின் செயற்பாடுகளில் உள்ளாகி இருக்கின்றது. கடந்த வருடங்களில் சுதந்திர தினத்திற்காக பல கோடி ரூபாய் பணம் செலவு செய்வது வழக்கமாகும். சுதந்திர தினம் என்பதால் செலவுகள் பற்றி யாரும் பேசுவதும் இல்லை அதனை விமர்சிப்பதுமில்லை.

இம்முறை மொத்தமாக எட்டு கோடி ரூபாய் செலவில் சுதந்திர தினம் கொண்டாடப்பட்டதாக உத்தியோகபூர்வ தகவல்கள் தெரிவிக்கின்றன. இதற்கு முன்னைய ஆண்டுகளில் இத்தொகை பன் மடங்கு அதிகமாகும். பல வகையில் அரசாங்கம் செலவுகளை கட்டுப்படுத்தி உள்ளது. ஜனாதிபதி அவர்கள் சுதந்திர சதுக்கத்தில் நடைபெற்ற நிகழ்வுக்கு வரும் பொழுது மட்டுப்படுத்தப்பட்ட வாகனங்களை பயன்படுத்தி இருப்பது குறிப்பிடத்தக்கது.

பிரதமரும் ஏனைய அரசியல் முக்கியஸ்தர்களும் அவ்வாறே செயல்பட்டு இருக்கிறார்கள். இதன் மூலம் கணிசமானளவு செலவு குறைக்கப்பட்டுள்ளது. அதேபோன்று சுதந்திர தினத்திற்காக வழமையாக நாட்டின் அரச அலுவலகங்கள் நகரங்கள் மின் அலங்காரம் செய்யப்பட்டு அலங்கரிக்கப்படுகின்றன. இதன் மூலம் பெருந்தொகையான பணம் செலவாகின்றது. ஒரு வாரமாக அரச அலுவலகங்களில் மின் அலங்காரங்கள் செய்யப்படுகின்றன. இம்முறை அரசின் கணிப்பில் மின் அலங்காரங்கள் நிறுத்தப்பட்டன.

இதன் மூலம் பெருமளவு மின்சாரம் சேமிக்கப்பட்டிருக்கின்றது. எதிர்காலத்தில் மின்சார தட்டுப்பாடுகள் ஏற்படும் நிலை இருப்பதன் காரணமாக அரசு புத்திசாதுர்யமாக இச் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளது. அரசின் இந்த செயல்பாடு பாராட்டக் கூடியது. அணி வகுப்புக்கான படையினரின் எண்ணிக்கையும் குறைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பல வகையில் அரசாங்கம் செலவுகளை குறைத்து இந்த சுதந்திர தின விழாவை அனுஷ்டித்திருக்கின்றது.

மத தலைவர்கள், பொது மக்கள் இதனை பாராட்டி இருக்கின்றார்கள். ஆடம்பரம் இல்லாமல் அபிமானத்துடன் சுதந்திர தினத்தை கொண்டாட அரசு எடுத்த நடவடிக்கைகளுக்கு முழு மக்களும் ஆதரவு தெரிவிக்கின்றார்கள். இன்று மக்கள் பேசுவது சுதந்திர தினத்தை நடத்திய முறை பற்றியாகும். எதிர்காலத்தில் வீண் விரயங்களை தவிர்க்குமாறு கோரிக்கை விடுவிக்கின்ற அரசு முன்மாதிரியாக செயல்பட்டிருப்பது வரவேற்பிற்குரியது.

## முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால்
# சுதந்திர தினம் அனுஷ்டிப்பு





இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் 77 ஆவது தேசிய சுதந்திர தின விழாவை ஒட்டியதான இஸ்லாமிய சமய நிகழ்வுகள் இன்று காலை 6 மணி முதல் கொழும்பு 6, வெள்ளவத்தை ஜ/ம்ஆப் பள்ளிவாசலில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

"தேசிய மறுமலர்ச்சிக்காய் ஒன்றிணைவோம்" என்ற மகுடம் தாங்கி இம்முறை தேசிய சுதந்திர தினம் கொண்டாடப்படுகிறது.

அந்தவகையில், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில், இலங்கை பாராளுமன்ற பிரதி சபாநாயகர் வைத்தியர் ரிஸ்வி ஸாலி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், தேசிய ஒருமைப்பாட்டு பிரதி அமைச்சர் முனீர் முளப்பர் கௌரவ அதிதியாக கலந்து கொண்டார்.

அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் பொதுச் செயலாளர் அஷ்ஷெய்க் அர்க்கம் நூரமித் முஸ்லிம் சமய வாழ்த்துரையை வழங்கினார். ஜம்இய்யாவின் பிரதிநிதிகளாக ஆலிம்கள் பலரும் வருகை தந்திருந்தனர்.

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் எம்.எஸ்.எம். நவாஸ் வரவேற்புரை நிகழ்த்தியதோடு, உதவிப் பணிப்பாளர்களான என்.நிலோபர் மற்றும் எம்.எஸ். அலா அஹமத் மற்றும் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் முப்தி முர்சி, வக்ஃப் நியாய சபை பதில் செயலாளர் எம். என்.எம். ரோஸன் மற்றும் திணைக்கள உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில், கிராஅத் வெள்ளவத்தை ஜும்ஆப்பள்ளிவாசல் பேஸ்இமாம் அஷ்ஷெய்க் எம்.எஸ்.எம்.சியாம் (ரஷாதி) வழங்கியதோடு,

வரவேற்புரையை முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் எம்.எஸ்.எம். நவாஸ், விசேட துஆப்பிரார்த்தனை அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் பொதுச் செயலாளர் அஷ்ஷெய்க் அர்க்கம் நூரமித் மற்றும் இலங்கை பாராளுமன்ற பிரதி சபாநாயகர் வைத்தியர் ரிஸ்வி ஸாலி தேசிய ஒருமைப்பாட்டு பிரதி அமைச்சர் முனீர் முளப்பர் ஆகியோர் உரையாற்றியதோடு, வெள்ளவத்தை ஜும்ஆப்பள்ளிவாசல் உதவிச் செயலாளர் அல்ஹாஜ் எம்.எம். இர்பான் நன்றியுரை நிகழ்த்தினார்.

வெள்ளத்தை ஜும்ஆப் பள்ளிவாசல் நிர்வாக சபைத் தலைவர் முஹம்மத் ரிஸ்வி உட்பட நிர்வாக சபை உறுப்பினர்கள், ஏனைய பள்ளிவாசல்களைச் சேர்ந்த நிர்வாக சபை பிரதிநிதிகள் என்போரும் வந்திருந்தனர்.

ஆலிம்கள், அரசியல் தலைவர்கள், அதிதிகள் மற்றும் அதிகாரிகள் எனப் பலரும் இந்நிகழ்வில் பிரசன்னமாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

அதேபோல், பல்வேறு ஊடக நிறுவனங்களையும் சேர்ந்த ஊடகவியலாளர்கள் வருகை புரிந்து தம் பணிகளை செவ்வனே நிறைவேற்றினர்.

ஊடகப் பயிற்றுவிப்பாளரும், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் நிகழ்ச்சித் தயாரிப்பாளருமான இஸ்பஹான் சாப்தீன் இந்நிகழ்வினை தொகுத்து வழங்கினார்.



# அல்குர்ஆன் உங்கள் இதயத்துடன் பேசுகிறது....

(இப்னு தவ்பீக் ஆலீம்)

### அல்லாஹ்வுக்கும் தூதருக்கும் கீழ்ப்படிதல்

(நபியே! மனிதர்களை நோக்கி) நீங்கள் கூறுங்கள். ”நீங்கள் மெய்யாகவே அல்லாஹ்வை நேசிப்பவர்களாக இருந்தால் என்னை பின்பற்றுங்கள். உங்களை அல்லாஹ் நேசிப்பான். உங்கள் பாவங்களையும் அவன் மன்னித்து விடுவான். அல்லாஹ் மிக அதிகம் மன்னிப்பவனும் நிகரற்ற அன்புடையவனுமாக இருக்கின்றான்.”(3:31)

(நபியே! மேலும்) நீங்கள் கூறுங்கள். ”அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் நீங்கள் கீழ்ப்படியுங்கள். அன்றி நீங்கள் புறக்கணித்தால் நிச்சயமாக அல்லாஹ் நிராகரிப்பவர்களை நேசிப்பதில்லை.”(3:32)

### முழுமையான கூலி

எவர்கள் நம்பிக்கை கொண்டு, நற்செயல்களையும் செய்கின்றார்களோ அவர்களின் நற்(கூலியை) அல்லாஹ் அவர்களுக்கு முழுமையாக வழங்குவான். அல்லாஹ் அநியாயக்காரர்களை நேசிப்பதில்லை.(3:57)

### இஸ்லாமே அங்கீகரிக்கப்பட்ட மார்க்கம்

இஸ்லாமையன்றி (வேறொரு) மார்க்கத்தை எவரேனும் விரும்பினால் நிச்சயமாக அவரிடமிருந்து (அது) அங்கீகரிக்கப்பட மாட்டாது. மறுமையில் அவர் நஷ்டமடைந்தவராகவே இருப்பார்.(3:85)

### வருத்தப்பட்டு பாவங்களிலிருந்து விலகினால்

எனினும், இதற்குப் பின்னரும் எவரேனும் வருத்தப்பட்டு (பாவங்களில் இருந்து) விலகி நற்செயல்களை செய்தால் (அல்லாஹ் அவர்களை மன்னித்து விடுவான்.) ஏனென்றால், நிச்சயமாக அல்லாஹ் மிக மன்னிப்பவனும் நிகரற்ற அன்புடையவனுமாக இருக்கின்றான்.

### நிராகரிப்பிலேயே நீடித்தல்

ஆயினும் எவர்கள் நம்பிக்கை கொண்டதன் பின்னர் நிராகரித்துவிட்டு மென்மேலும் அந்நிராகரிப்பையே அதிகப்படுத்துகின்றார்களோ, அவர்களுடைய மன்னிப்பு கூறுதல் நிச்சயமாக அங்கீகரிக்கப்பட மாட்டாது. இவர்கள்தான் (முற்றிலும்) வழி கெட்டவர்கள்.(3:90)

நிச்சயமாக எவர்கள் நிராகரித்து (நிராகரிப்பிலிருந்து மீளாது) நிராகரித்த வண்ணமே இறந்தும் விடுகின்றனரோ அவர்களில் ஒருவனுக்கு இப்பூமி நிறைய தங்கம் இருந்து அதனைத் (தன் குற்றத்தை மன்னிப்பதற்கு தனக்கு ஈடாக அவன் கொடுத்த போதிலும் அது அங்கீகரிக்கப்பட மாட்டாது. இத்தகையவர்களுக்கு மிக துன்புறுத்தும் வேதனையுண்டு. இவர்களுக்கு உதவி செய்பவர்கள் (அங்கு) ஒருவரும் இருக்க மாட்டார்கள்.(3:91)

### தானமாக செலவு செய்தல்

உங்களுக்கு பிரியமான பொருளிலிருந்து நீங்கள் (தானமாக) செலவு செய்யாத வரையில் நிச்சயமாக நீங்கள் நன்மையடைய மாட்டீர்கள். ஒரு சொற்பத்தை நீங்கள் தானம் செய்த போதிலும் நிச்சயமாக அல்லாஹ் அதனையும் நன்கு அறிவான்.(3:92)

### ஹஜ் மிக்க பாக்கியம்

(இவ்வுலகில் இறைவனை வணங்குவதற்கென) மனிதர்களுக்கு அமைக்கப்பட்ட ஆலயங்களில் முதன்மையானது நிச்சயமாக ”பக்கா”வில் (மக்காவில்) இருப்பதுதான். அது மிக்க பாக்கியமுள்ளதாகவும், உலகத்தாருக்கு நேரான வழியை அறிவிக்கக் கூடியதாகவும் இருக்கின்றது.(3:96)

அதில் தெளிவான அத்தாட்சிகளும் இருக்கின்றன.இப்ராஹிம் (தொழுகைக்காக) நின்ற இடமும் இருக்கின்றது. எவர் அதில் நுழைகின்றாரோ அவர் (பாதுகாப்பு பெற்ற) அச்சமற்றவராகி விடுகின்றார். ஆகவே, எவர்கள் அங்கு பிரயாணம் செல்ல சக்தி உடையவர்களாக இருக்கின்றார்களோ அத்தகைய மனிதர்கள் மீது அல்லாஹ்வுக்காக (அங்கு சென்று) அந்த ஆலயத்தை ஹஜ் செய்வது கடமையாகும். எவரேனும் (இதை) நிராகரித்தால் (அதனால் அல்லாஹ்வுக்கு ஒன்றும் குறைந்து விடுவதில்லை. ஏனென்றால்) நிச்சயமாக அல்லாஹ் உலகத்தாரின் தேவையற்றவனாக இருக்கின்றான்.(3:97)

### கொரோனா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்த பிரேரணை அரசியலுக்கு அப்பால் ஆளும் தரப்பு, எதிர் தரப்பு என்ற பாகுபாடுகளின்றி அனைத்து கட்சிகளின் ஆதரவோடு நிறைவேற்றப்படவேண்டும் என்பது அனைத்து மக்களினது விருப்பமாகும்.

# நாச்சியாதீவு மு.ம.வித்தியாலயத்தில் வித்தியாரம்ப விழா-2025





(ரியாஸ் அஹமட்)

2025ம் கல்வி ஆண்டிற்காக முதலாம் தரத்திற்கு புதிய மாணவர்களை இணைத்து கொள்ளும் வித்தியாரம்ப விழா கடந்த வியாழக்கிழமை(30) பாடசாலையின் மதிப்பிற்குரிய அதிபர் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்விற்கு பிரதம அதிதியாக அநுராதபுர வலயக்கல்விப் பணிமனையின் ஆரம்பப் பிரிவு ஆசிரிய ஆலோசகரும் இரண்டாம் மொழி வளவாளருமான அஹமட் ராபி கலந்து கொண்டார்.

தரம் 2 மாணவர்கள் மலர்கொத்து வழங்கி புதிய மாணவர்களை வரவேற்றதுடன் கலைநிகழ்ச்சிகள் மூலமும் புதிய மாணவர்களை மகிழ்வித்தனர்.

தரம் 1 புதிய மாணவர்களுக்கான முதலாவது பாடத்தினை அல்-ஹிகம் அரபுக் கல்லூரியின் அதிபர் அஷ்ஷெய்க் உவைசுல் கர்னி (முப்தி) ஆரம்பித்து வைத்தார்.







# அமெரிக்கா - சியோனிச அடக்குமுறை...
# எதிர்த்து போராடும் காசா மக்கள்!



எஸ்.ஏ. சுஃப்யான்
(Senior Journalist, Chennai - Tamilnadu, India)

இஸ்ரேல் ஹமாஸ் இடையே காசா பகுதியில் வெடித்த மோதல் சுமார் 15 மாதங்களுக்கு பிறகு இப்போது தான் முடிவுக்கு வந்துள்ளது. போர் முடிந்து அங்கு மெல்ல அமைதியான சூழல் திரும்பி வரும் நிலையில் அமெரிக்க அதிபர் டிரம்ப் சில பரபர கருத்துகளைத் தெரித்துள்ளார். டிரம்பின் இந்த கருத்துகளை அங்குள்ள அரபு நாடுகள் உற்றுக் கவனித்து வருகின்றன. இந்த கருத்து கிறித்தவ - சியோனிசம் சார்ந்த மோசமான மனித உரிமைகள் மற்றும் விரோதமான கருத்து என்பதை நாம் புரிந்து கொள்ள முடிகிறது.

22 க்கு மேற்பட்ட அரபு நாடுகள் மற்றும் பிரான்ஸ் நாடு இந்த மோசமான கருத்திற்கு கடுமையாக தனது எதிர்ப்பை பதிவு செய்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த திட்டம் முழுமையாக ஒரு இன அழிப்பு என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் யாருக்கும் இருக்க வாய்ப்பே இல்லை. அமெரிக்கா அரசு அதன் அதிபர் கசாவை வீட்டு பாலஸ்தீன மக்களை முழுமையாக வெளியேறி விட்டு அந்த பகுதியில் தாம் புதிய தேவைகளுக்கு பயன்படுத்தி கொள்ள திட்டம் உள்ளதாக விஷம் தடவிய வாழைப்பழத்தை தருவதற்கு அவர் முயற்சி செய்து வருகின்றனர்.

இஸ்ரேல் ஹமாஸ் இடையே கடந்த 2023ம் ஆண்டு அக்டோபர் மாதம் போர் தொடங்கியது. சுமார் ஓராண்டிற்கு மேலாகவே போர் தொடர்ந்து வந்தது. இதனால் காசாவில் உள்ள அப்பாவி மக்கள் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர். இந்த போரில் இதுவரை 47,000 க்கு மேற்பட்ட பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்ட நிலையில் தற்போது வடக்கு கசா நோக்கி பொது மக்கள் சாரை, சாரையாக வந்து கொண்டு இருக்கும் நிலையில் தான் டோனொல்ட் ட்ரம்ப் இந்த மனித குல விரோத கருத்தை தெரிவித்துள்ளார்.

நீண்ட முயற்சிக்கு பிறகே கத்தார் உள்ளிட்ட நாடுகள் மத்தியஸ்தனம் செய்ததில் ஒருவழியாகப் போர் முடிவுக்கு வந்தது. இரு தரப்பும் போர் நிறுத்தத்தில் கையெழுத்திட்ட நிலையில், தாக்குதல் நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் காசாவில் மெல்ல அமைதி திரும்பி வருகிறது. காசா நகர் முழுவதும் போலீஸ் மற்றும் ஹமாஸ் இயக்கத்தின் வீரர்கள் மூலம் ஒழுங்கு செய்யப்பட்ட நடவடிக்கைகள் தற்போது முழு வீச்சில் நடைபெற்று வரும் நிலையில் தான் இந்த தகவல் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அதாவது காசா பகுதியில் இப்போது தான் போர் நிறுத்தம் அமலுக்கு வந்துள்ள நிலையில், போரை எப்படி முடிவுக்குக் கொண்டு வரலாம் என்பது குறித்து அவர் தனது யோசனையை வெளிப்படுத்தியுள்ளார். காசா பகுதியில் இருந்து அதிகப்படியான பாலஸ்தீனிய அகதிகள் வெளியேறும் சூழலில் அவர்களை ஜோர்டான், எகிப்து மற்றும் இதர அரபு நாடுகள் அதிகம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் தெரிவித்தார். போரினால் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள காசா பகுதியைச் சுத்தப்படுத்த இதுவே ஒரு வழி என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இலட்சக்கணக்கான மக்கள் தங்கள் வீடுகளில் இருந்து வெளியேறி திரும்பி வந்த நிலையில் வீடுகள் முற்றாக தரைமட்டமாக்கிய நிலையில் தான் அவர்கள் தங்கள் நிலத்தை மட்டுமே நேசிக்கும் நிலையில் அங்கு வந்து கொண்டு இருப்பதை காணலாம்.

அமெரிக்க அதிபர் டிரம்ப் தனது ஏர் ஃ போர்ஸ் ஒன் விமானத்தில் பயணித்த நிலையில், அப்போது விமானத்திலேயே வைத்து செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது காசா போர் குறித்து அவரிடம் எழுப்பப்பட்ட கேள்விக்குத் தான் அவர் இந்த பதிலை அளித்தார்.ஜோர்டான் மன்னர் இரண்டாம் அப்துல்லா மற்றும் எகிப்து அதிபர் அப்துல் பத்தா எல்-சிசியுடன் காசாவில் இருந்து வெளியேறும் பாலஸ்தீன அகதிகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எகிப்து மற்றும் கத்தார் ஆகிய நாட்டின் தலைவர்கள் இரட்டை தேசம் உருவாக்க வேண்டிய முயற்சி நெருங்கி நிலையில் இருப்பதாக எண்ணும் தருவாயில் தான் இது போன்ற கொடூரமான யோசனை அவரால் வைக்க முடிகிறது.

அமெரிக்கா அதிபர் டொனால்ட் ட்ரம்ப் துதர் ஸ்வீவ் வீச் கோஃப் தற்போது பெஞ்சமின் நிதான்யாகு வை சந்தித்து வரும் நிலையில் அவர் காசாவில் பயணம் மேற்கொண்டு நிலையை அவதானிக்க இருப்பதாக அறியப்படுகிறது.

சீயோனிச குறிக்கோள் என்பது மேற்கு கரையை தங்கள் உடன் இணைத்து கொண்டு அல் அக்ஸா பள்ளி வாசலை தங்களுக்கு உரித்தான ஒன்றாக மாற்றிக் கொள்ள அவர்கள் முயற்சி செய்யும் இந்த வேலையில் தான் அந்த பகுதியை அவர்கள் ஜீடோயா - சமேரியா என்று அறிவித்து வருவதைக் நாம் காண கூடியதாக இருக்கிறது. அமெரிக்காவின் ஐ நா தூதர் மேடம் பிக் யூதர்களுக்கு பைபிள் வசனங்கள் வாயிலாக ( Biblical rights) இருப்பதாக ஆணித்தரமாக தன் கருத்தை வெளிப்படுத்தி வருவதைக் காண முடிகிறது.

அதே சமயம், அமெரிக்கா அதிபர் ஜோர்டான் மக்கள் பாலஸ்தீன அகதிகளை ஏற்றுக்கொள்ள வேண்டும். எகிப்தும் கூட ஏற்க வேண்டும் என்றே நினைக்கிறேன். நான் அங்கிருந்து வெளியேறும் 15 லட்சம் மக்களின் எதிர்காலம் குறித்து யோசிக்கிறேன். காசா பகுதி போரினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. அதை நாம் முழுவதுமாக சுத்தம் செய்ய வேண்டும். அதுதான் ஒரே வழி. அங்கே அவ்வளவு தான். எல்லாம் முடிந்துவிட்டது இனி மக்கள் வாழும் சூழல் இல்லை என்கிற அவரின் கருத்து, இறையாண்மை கொண்ட தேசங்களுக்கு மிகப் பெரிய அளவில் ஆன அச்சுறுத்தல்களை ஏற்படுத்தி உள்ளது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில் அமெரிக்கா அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தனக்கும் எகிப்து அதிபர் சிசிக்கும் உள்ள நட்புறவு குறித்து பேசுகிறார். அமெரிக்கா இதற்கு முன் எகிப்து நாட்டின் வளர்ச்சிக்கு செய்த உதவியை இந்த தருணத்தில் எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கொஞ்சம் கூட சம்பந்தம் இல்லாத நிலையில் அறிவு ஞானம் மழுங்கிய நிலையில் அவர் பேசுகிறார் என்பதை நாம் புரிந்து கொள்ள முடிகிறது. பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பில் வாழ்ந்து வரும் மக்களை வெளியேற்றி விட (ethnic cleansing) செய்வதற்கு சர்வதேச சட்டத்தில் எந்தவொரு வழி வகை இல்லை என்பதே பிரான்ஸ் நாட்டின் வலி வாய்ந்த கருத்தாக இருக்கிறது.

பாலஸ்தீனிய அகதிகளை ஜோர்டான் இப்போதே ஏற்று வருகிறது. அதை நான் மறுக்கவில்லை. ஆனால், வரும் காலங்களில் கூடுதலாக அகதிகளை ஏற்க வேண்டும் என்றே சொல்கிறேன். இதைத் தான் நான் ஜோர்டான் மன்னரிடம் குறிப்பிட்டேன். நான் முன்பே சொன்னது போலக் காசா பகுதியில் மிகப் பெரிய குழப்பம் நிலவி வருகிறது.. அங்கே நிஜமாகவே பெரிய குழப்பம் தான் நிலவி வருகிறது. இந்த மக்களின் பிரச்சினைக்கு எகிப்து மற்றும் கத்தார் ஆகிய இரண்டு நாடுகள் மத்தியசம் செய்தார்களே தவிர எல்லா நிலைகளிலும் அவர்கள் அமெரிக்காவின் எடுபிடிகளாக மாற முடியாது என்பதை அவர்கள் நன்கு உணர்ந்து கொண்ட நிலையில் தான் தற்போது இந்த பிரச்சினை நகர்ந்து கொண்டே வருகிறது.

இதற்கிடையில் பாலஸ்தீன மக்களின் பிரச்சினைக்கு இதுவரை தங்களின் உயிர் மற்றும் பொருட்களை தாரை வார்த்து நிற்கும் சக்திகளாக ஈரான், லெபனான் மற்றும் ஏமென் ஹொதீக்கள் மற்றுமே இருந்து வருவதை நாம் காண முடிகிறது. ஈரானின் வலிமை வாய்ந்த தலைவர் செய்து அலி கொமேய்னி அமெரிக்கா மற்றும் யூத சாத்தான்களின் செயல்பாடுகளை உன்னிப்பாக கவனித்து வர வேண்டும் என்று கூறினார். ஈரானின் வெளிவிவகார அமைச்சர் அப்பாஸ் அராகச்சி ஸ்கை மீடியா விற்கு வழங்கிய பேட்டியில் கீரின்லாந்து நாட்டை டென்மார்க் இடமிருந்து வாங்கி அங்கு யூதர்களைக் குடியேற்றி விடலாம் என்று பரிகாசம் செய்து உள்ளார் என்பதை நாம் அறிவோம்.

தற்போதைய நிலையில் அமெரிக்கா அதிபர் டொனால்ட் ட்ரம்ப் பாலஸ்தீன மக்கள் அங்கிருந்து அதிகளவில் வெளியே வருகிறார்கள். இது தற்காலிகமாகவும் இருக்கலாம். அல்லது நிரந்தரமாகவே கூட அவர்கள் வெளியேறலாம். அவர்களுக்கு நாம் தங்கச் சரியான இடத்தை தர வேண்டும் என்றே நான் சொல்கிறேன். இந்த வார்த்தை முழுமையாக பொய் என்பதை நாம் புரிந்து கொள்ள முடிகிறது. 23 இலட்சம் மக்களும் சாரையாக தங்கள் சொந்த மண்ணை நோக்கி வரும் நிலையில் அவர்கள் வெளியேறி வருவதாக அமெரிக்கா அதிபர் டொனால்ட் ட்ரம்ப் பொய் கூறி வருகிறார் என்பதை நாம் புரிந்து கொள்ள முடிகிறது.

பல காலமாகவே காசா பகுதியைச் சுற்றி மோதல் நிலவி வருகிறது. இப்போது காசா பகுதி ஏதோ இடிக்கப்பட்ட தளம் போல இருக்கிறது. ஏறக்குறைய அனைத்து கட்டிடங்களுமே இடிக்கப்பட்டுள்ளன. மக்கள் அங்கே இறந்து கொண்டிருக்கிறார்கள். அங்கிருந்து அவர்கள் வெளியேறுவதே சரியாக இருக்கும். இது குறித்து நான் இதர சில அரபு நாடுகள் உடனும் பேசுவேன். காசாவில் இருந்து வெளியேறும் பாலஸ்தீன அகதிகளுக்கு வேறு இடத்தில் நாம் வீடுகளை அமைத்துத் தர வேண்டும். அங்கே அவர்கள் நிம்மதியாக வாழலாம்" என்று அமெரிக்கா அரசு அழுத்தம் திருத்தமாக கூறி வருகிறது.

உண்மையை சொல்ல போனால் சர்வதேச நாடுகள் அமெரிக்காவின் முடிவு மூலம் அதிர்ச்சி அடைந்த நிலையில் மனித உரிமைகள் பற்றிய புரிதல் எந்தவொரு நாட்டிற்கும் இல்லையோ என்று எண்ணத் தோன்றுகிறது. இந்த போரை யூதர்கள் நடத்தியதாக அறியப்பட்ட நிலையில் இந்த போரை அமெரிக்கா தேசம் தான் நடத்தியது குறிப்பிடத்தக்கது. அதற்கான மூலம் மத்திய கிழக்கு நாடுகள் மத்தியில் தனக்கு சாதகமாக ஒரு பேட்டை தாதாவை வைப்பதை போன்று யூதர்கள்களை அங்கு நிலைநிறுத்தி தங்கள் எண்ணெய் வளம், ஆயுத விற்பனை சந்தையாக அமெரிக்கா அந்த பகுதியை மாற்றி வருகிறது. அதற்கு இஸ்ரேல் என்கிற தேசம் அவர்களுக்கு அங்கு நிலைநிறுத்தி கொள்ளவே பல பில்லியன் அமெரிக்க டாலர்கள் மற்றும் ஆயுதங்களை அவர்களுக்கு வழங்கிக் மக்களை படுகொலை செய்ய காரணமாக இருந்து வருவதைக் நாம் புரிந்து கொள்ள முடிகிறது.

இதற்கிடையில், இதுவரை பல்வேறு பாலஸ்தீன கைதிகள் இஸ்ரேலிய அடக்குமுறை கொட்டடிகளில் இருந்து வெளியேறி வரும் நிலையில் ஆயுள் தண்டனை கைதிகளா மர்வான் மற்றும் அஹ்மத் சதாத் உட்பட 5 பேரை விடுதலை செய்ய வேண்டும் என்று ஹமாஸ் இயக்கம் கோரிக்கை விடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது. மொத்தமா 1904 பாலஸ்தீன கைதிகள் விடுதலை செய்ய வேண்டும் என்று இந்த ஒப்பந்தம் கூறுகின்றது. அதில் பல ஆண்டுகள் அதாவது 20 ஆண்டுகளுக்கு மேலாக சிறையில் கொடூரமான சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்ட கைதிகளும் அடங்குவர் என்பதை நாம் கவனத்தில் எடுத்து கொள்ள முடிகிறது.

இந்த பிரச்சினை இரண்டு கோணங்கள் வாயிலாக நாம் காண கூடியதாக இருக்கிறது. யூதர்கள் மற்றும் கிறிஸ்தவர்கள் பைபிளை நம்பும் சூழலில் தான் அதன் வாசகம் அடிப்படையில் மேற்கு கரையை ஜீடோயா மற்றும் சமோரியா எங்கள் பிரதேசம் என உரிமை கொண்டாடி வருகின்றனர். இந்த நிலையில் தான் அமெரிக்கா அதிபர் நேற்றை முன்தினம் பல்வேறு சமூகங்கள் இந்த பகுதியில் வாழ்ந்து வந்த பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் வரலாற்றை குறிப்பிட்டு கூறுகிறார் என்பதே உண்மையாகும். அதேநேரத்தில், அதே காலகட்டத்தில் இஸ்லாமிய மார்க்கம் வருவதற்கு முன்பே இந்த மண்ணில் வாழ்ந்து மக்களை தான் 100 ஆண்டுகளுக்கு முன்பு வந்த யூதர்கள் தங்களின் பூமி என உரிமை கொண்டாடிய நிலையில் மண்ணில் வாழும் மக்களை அகதிகளாக ஜோர்டன் மற்றும் எகிப்து நாட்டிற்குச் செல்ல வேண்டும் என்று அமெரிக்கா அதிபர் டொனால்ட் ட்ரம்பால் பேச முடிகிறது என்பதை உலகம் அறிந்து கொண்டிருக்கிறது .

அதேநேரத்தில் யூதர்கள் எப்போதும் விரட்டப்பட்ட சபிக்கப்பட்ட ஒரு சமூகங்களாகவே உலக வரலாற்றில் அவர்களை நம்மால் அறிந்து கொள்ள முடிகிறது. ஏனெனில் அவர்களின் கடும் போக்கு வாதத்தை எற்று கொள்ள முன்வராத ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் பல்வேறு நாடுகளிலும் இருந்து வெளியேற்றப்பட்ட நாம் புரிந்து கொள்ளலாம். இதில் எந்தவொரு தடுமாற்றமும் யாருக்கும் இல்லை என்பதே வரலாறு ஆக உள்ளது.

இதற்கிடையில் சர்வதேச ராணுவம் சார்ந்த கருத்தாய்வாளர்கள், போரியல் வல்லுனர்கள் இந்த போரில் யூதர்கள் படுதோல்வி அடைந்தது உண்மைதான் என்பதை வெளிப்படுத்தும் விதமாக தங்கள் கருத்துக்களை பகிர்ந்து வருகின்றனர். இந்த போரில் வாயிலாக பல்வேறு வாய்ப்புகளை பெஞ்சமின் நிதான்யாகு வின் அரசு இழந்து விட்டது என்று பிரதான எதிர்க்கட்சி தலைவர் யாயிர் லாபிட் கருத்து தெரிவித்து உள்ளார். அதேநேரத்தில் கடும்போக்கு மற்றும் சியோனிச வெறித்தனம் அடிப்படையில் எப்போதும் பேசும் இத்தாமர் பென் கேவிர் மற்றும் ஸ்மோட்ரிச் போன்றவர்கள் அமெரிக்கா அதிபர் டொனால்ட் ட்ரம்ப் கூறும் ஆலோசனைகளை பெஞ்சமின் நிதான்யாகு உடனடியாக ஏற்று செயல்படுத்த முன் வர வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளனர்.

உலகின் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் வரலாற்றில் சர்வாதிகாரம் மற்றும் அநீதி வெற்றி பெற்றுள்ள நிலையில் அது எப்போதும் வெற்றியை நோக்கி பயணம் செய்ய இயலாது. இது போன்ற நடவடிக்கைகள் நிரந்தரமாக இருக்காது என்பதை நாம் புரிந்து கொள்ள முடிகிறது.

அதே சமயம் காசாவில் வாழும் மக்களின் தியாகம், மன உறுதியை பார்க்கும் போது இது போன்ற ஒரு சமூகம் விசேட படைப்புகளாக இருக்குமோ என்று எண்ணத் தோன்றும் அளவுக்கு அவர்களின் மனநிலை நாம் காண முடிகிறது. அவர்கள் மரணத்தை முத்தமிட தயாராக இருக்கிறார்கள். குண்டுகளால் துளைக்கப்பட்ட தங்கள் குழந்தைகளை முத்தமிட்டு அனுப்புகிறார்கள். சிதறிக்கிடந்த கட்டட இடிபாடுகள் இடையை இறைவனை வணங்கும் நிலையில் அவர்கள் வாழ்வின் முடிவுகளை, இழப்புகளை தீர்மானம் செய்யும் ஒரே சக்தியாக இறைவன் ஒருவனே இருக்கும் நிலையில் இதற்கான தீர்வு என்பது பொறுமையின் மூலம் நாம் கண்டு கொள்ள முடியும் என்பதில் யாருக்கும் எந்த சந்தேகமும் வேண்டாம் என்பதை அழுத்தம் திருத்தமாக நான் முற்றுப்புள்ளி வைக்கிறேன்.

# உள்ஞாராட்சி தேர்தல்; பலமடையும் எதிர்க்கட்சி அரசுக்கு சவாலாகுமா?



எம்.எஸ். அமீர் ஹுசைன்

பிரதான எதிர்க்கட்சியான சமகி ஜனபலவேகய கட்சி அண்மையில் ஏனைய கட்சிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளின் பலனாக புதிய இணக்கப்பாட்டின் அடிப்படையில் ஐக்கிய மக்கள் கூட்டமைப்பு என்ற புதிய பெயரில் எதிர்வரும் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை சந்திக்க தயாராகி வருகின்றது. இந்த புதிய கூட்டமைப்பின் தலைவராக எதிர்க்கட்சித் தலைவராக இருந்து வரும் சஜித் பிரேமதாசாவே இருக்க வேண்டும் என்றும் தீர்மானிக்கப் பட்டிருக்கின்றது.

அதே நேரம் பொதுஜன பெரமுண கட்சியும் வீடு வீடாக சென்று பிரச்சாரம் செய்து கட்சியை கட்டியெழுப்பும் நடவடிக்கைகளை 2025.02.02 ஆம் திகதி நாமல் ராஜபக்ஷ தலைமையில் அநுராதபுரத்தில் இருந்து ஆரம்பித்திருக்கின்றது.

ஒத்திப் போடப்பட்டுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் 2025 ஏப்ரில் மாதம் முதலாம் அல்லது நான்காம் வாரத்தில் நடைபெறலாம் என்று அமைச்சர் பிமல் ரத்நாயக்க அண்மையில் தெரிவித்தார்.

அதன்படி அரசியல் கட்சிகள் மத்தியிலும் இந்த தேர்தல் தொடர்பான எதிர்பார்ப்பு வலுவடைய ஆரம்பித்திருக்கின்றது. அத்துடன் அரசாங்கம் முன்னைய வேட்பு மனுக்களை இரத்து செய்து புதிதாக தேர்தலை நடத்துவதற்கு தேவையான ஏற்பாடுகளை செய்வதற்காக உள்ளூராட்சி சபைத் தேர்தல் திருத்த சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

இந்த நிலையில் அந்த சட்டமூலம் அரசியல் அமைப்பிற்கு முரணானது என்று தீர்ப்பளிக்க வேண்டும் என்று கோரும் மனுவொன்றை ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் உட்பட நான்கு அரசியல் கட்சிகள் கூட்டாக இணைந்து உயர் நீதிமன்றத்தில் சமர்ப்பித்திருந்தது. அந்த மனு மீதான விசாரணைகளை பூர்த்தி செய்துள்ள நீதிமன்றம் அதன் தீர்ப்பையும் சபாநாயகர் மற்றும் ஜனாதிபதி ஆகியோருக்கு அனுப்பி வைத்திருக்கின்றது. அந்த தீர்ப்பு என்னவென்பதை சபாநாயகர் 2025.02.05 ஆம் திகதி பாராளுமன்றம் கூடியவுடன் அறிவிப்பார். அதனைத் தொடர்ந்து 18 ஆம் திகதி சட்டமூலம் விவாதத்திற்கு வரும் சாத்தியங்கள் இருக்கின்றன.

சட்டமூலம் நிறைவேறியவுடன் தேர்தல் ஆணைக்குழு அடுத்த கட்ட நடவடிக்கைகளை ஆரம்பிக்கும்.

ஏற்கனவே 2023 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நடத்துவதற்கான ஏற்பாடுகளை செய்து அதற்கான வேட்புமனுக்கள் கோரப்பட்டிருந்தது. ஆனாலும் அந்த தேர்தல் அப்போதைய ஜனாதிபதியாக இருந்த ரணில் விக்கிரமசிங்கா தேர்தலை நடத்த பணம் இல்லை என்றும் அன்றைய சூழ்நிலையில் நிலவிய பொருளாதார நெருக்கடியை காரணம் காட்டி தேர்தலை பின்போட்டார்.

இதற்கிடையில் 2024 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலும் பொதுத் தேர்தலும் நடைபெற்றது. புதிய அரசாங்கம் இந்த வருடம் எப்படியாவது உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலையும் மாகாண சபைகளுக்கான தேர்தலையும் நடத்துவதாக வாக்குறுதி வழங்கி இருக்கின்றது. இவ்வாறான ஒரு பின்னணியில் கடந்த மாதம் இவ்வாறு ஒத்திப் போடப்பட்டுள்ள தேர்தல் தொடர்பான கலந்துரையாடல் இடம்பெற்ற போது முன்னைய வேட்புமனுக்களை இரத்து செய்து புதிதாக வேட்புமனுக்களை கோர தீர்மானம் ஒன்று எடுக்கப்பட்டதோடு அதற்கு ஏனைய அரசியல் கட்சிகளும் இணக்கம் தெரிவித்திருக்கின்றது.

முன்னைய வேட்புமனுக்களின் அடிப்படையில் தேர்தலை நடத்த தீர்மானம் எடுக்கப்பட்டால் அந்த வேட்புமனுக்களில் இடம்பெற்றிருந்த 35 இற்கும் மேற்பட்ட தேசிய மக்கள் சக்தி அபேட்சகர்கள் கடந்த பொதுத் தேர்தலில் போட்டியிட்டு பாராளுமன்ற உறுப்பினர்களாக தெரிவாகி இருக்கின்றனர்.

இன்னும் சில ஏனைய அரசியல் கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் கட்சி மாறி உள்ளனர். இவ்வாறான காரணிகளை கவனத்தில் எடுத்து அரசியல் கட்சிகளுக்கிடையில் ஏற்பட்ட இணக்கப்பாட்டின் அடிப்படையில் 2023 ஆம் ஆண்டின் வேட்புமனுக்களை இரத்து செய்து புதிதாக வேட்புமனுக்களை கோர அண்மையில் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டது.

அதற்கான திருத்த சட்டமூலத்தையும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க தீர்மானிக்கப்பட்டது.

ஆனாலும் உயர் நீதிமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள மனுவில் மனுதாரர்கள் சார்பாக முன்வைக்கப்பட்டுள்ள விவாதம் இவ்வாறு வேட்புமனுக்கள் இரத்துச் செய்யப்பட்டால் போட்டியிடுவதற்காக முன்வந்த வேட்பாளர்களுக்கு அநீதி ஏற்படுவதாகவும் அதனால் அடிப்படை உரிமை மீறல் இடம்பெறுகின்றது என்றும் உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்து பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை மற்றும் சர்வஜன வாக்கெடுப்புக்கு விடப்பட்டே சட்டமூலம் நிறைவேற்றப்பட வேண்டும் என்று தீர்ப்பளிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

ஆனாலும் இந்த மனுக்கள் தொடர்பான விசாரணையின்போது சட்டமா அதிபர் சார்பாக ஆஜராகிய பிரதி சொலிசிட்டர் ஜெனரல் நிர்மலன் விக்னேஸ்வரன் உயர் நீதிமன்றத்தில் வாதிடுகையில் புதிதாக அரசாங்கம் சமர்ப்பிக்க இருக்கின்ற சட்டமூலத்தில் எந்தவிதமான அடிப்படை உரிமை மீறல்களும் இடம்பெறவில்லை என்றும் தேர்தல் சட்டத்தில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்தல், புதிய வாக்காளர்களுக்கு வாய்ப்பளித்தல் உட்பட பல நல்ல விடயங்கள் நடக்க இருப்பதால் சட்ட மூலத்தை சாதாரண பெரும்பான்மை மூலம் நிறைவேற்ற முடியும் என்று வாதங்களை முன்வைத்துள்ளார்.

அதன்படி இருதரப்பு வாதங்களையும் கேட்டு மனுவை பரிசீலித்த உயர் நீதிமன்ற நீதியரசர்களான யசந்த கோதாகொட, ஜனக டி. சில்வா, அர்ஜுன் ஒபேசேகர ஆகியோர் அவர்களது தீர்ப்பை 2025.01.27 ஆம் திகதி சபாநாகருக்கும் ஜனாதிபதிக்கும் அறிவித்திருக்கின்றனர். பெப்ரவரி மாதம் 05 ஆம் திகதி பாராளுமன்றம் கூடியவுடன் சபாநாயகர் அந்த தீர்ப்பை அறிவிப்பார்.

அதன் பின்னர் பெப்ரவரி 17 ஆம் திகதி அல்லது அதற்கு பிற்பட்ட ஒருநாளில் குறித்த உள்ளூராட்சி சபைகளுக்கான திருத்த சட்டமூலம் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்ட பின்னர் புதிதாக வேட்புமனுக்கள் கோரப்படும்.

அதன்பின்னர் எப்படியும் 2025 ஏப்ரில் மாதம் இறுதிக்குள் ஊள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் நடக்கும் சாத்தியம் இருந்து வருகின்றது.

இதற்கிடையில் எதிர்க்கட்சியான சமகி ஜனபலவேகய கட்சி கடந்த 2025.01.27 ஆம் 28 ஆம் திகதிகளில் ஏனைய அரசியல் கட்சிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி இருக்கின்றது. இதில் ஐ.தே.க. வுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளிலும் இணக்கம் எட்டப்பட்டிருப்பதாக ஐக்கிய மக்கள் சக்தி கட்சி வட்டாரங்களில் இருந்து அறிய முடிகின்றது. அத்துடன் ஏனைய அரசியல் கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை ஒன்று நடத்தப்பட்டு அதுவும் சாத்தியமாகி இருக்கின்றது. இவ்வாறாக திடீர் தேர்தல் ஒன்று நடக்குமானால் குறிப்பாக ஐ.தே.க. வுடன் இணைந்து போட்டியிடுவது தொடர்பாகவே இத்தகைய பேச்சுக்களின் பின்னணி நோக்கமாகும்.

அத்துடன் ஏனைய கட்சிகளுடன் நடத்தி இருக்கின்ற பேச்சுவார்த்தைகளின் பின்னணி காரணம் பாராளுமன்றத்திற்கு உள்ளும் வெளியிலும் பலமான எதிர்க்கட்சியாக செயல்பட்டு அரசாங்கத்தின் தவறான போக்குகளுக்கு எதிராக குரல் எழுப்புவதாகும்.

எவ்வாறாயினும் தற்போதைய நிலையில் தேசிய மக்கள் சக்தி (ஜே.வி.பி) யானது இமய மலைபோன்று நிமிர்ந்து நிற்கின்ற நிலையில் எதிர்வரும் தேர்தலில் அந்த கட்சியின் மக்கள் ஆதரவை குறுகிய காலப்பகுதிக்குள் சரிக்க முடியுமா என்பது இந்த தேசிய மக்கள் சக்தியின் புதிய கூட்டணியின் முன்னால் இருக்கின்ற பிரதான சவாலாகும். அதே நேரம் எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களுக்கு 7,500 முதல் 10,000 ரூபா வரையிலான சம்பள அதிகரிப்பொன்றை அரசாங்கம் வழங்க உத்தேசித்து இருக்கின்றது. இந்த அதிகரிப்பு 2025 ஏப்ரில் மாதம் முதல் வழங்கவும் திட்டமிடப்பட்டிருக்கின்றது. அதனால் எதிர்வரும் தேர்தலில் ஆளும் கட்சியின் செல்வாக்கை சரிக்க முடியுமா என்பது ஐக்கிய மக்கள் கூட்டமைப்புக்கு பிரதான சவாலாக அமைய இருக்கின்றது.



---





ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், முன்னாள் இலங்கை அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் இலங்கை பாராளுமன்றத்தில் ஆற்றிய உரைகளின் தொகுப்பை இந்திய யூனியன் முஸ்லிம் லீக் அரசியல் உயர் நிலைக்குழு தலைவர் செய்யது சாதிக் அலி தங்ஙள் அவர்களின் பானக்காடு இல்லத்தில் சந்தித்து அளித்தார். மேலும், கேரளா சட்டமன்ற எதிர்கட்சித் துணைத் தலைவரும், தேசிய பொதுச் செயலாளருமான பி. கே. குஞ்சாலிகுட்டிக்கும் புத்ததகத்தை ரவூப் ஹக்கீம் வழங்கினார். இந் நிகழ்வில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாநில செயலாளர் ஆடுதுறை ஏ எம் ஷாஜஹான், தேசிய மாணவரணி தலைவர் பி. வி. அஹமது சஜு, தென்காசி மாவட்ட செயலாளர் செய்யது பட்டாணி, தேசிய மாணவரணி துணை தலைவர் புளியங்குடி அல் அமீன், தென்காசி மாவட்ட இளைஞரணி தலைவர் சையது அபுதாஹிர், மணிச்சுடர் மூத்த ஊடகவியலாளர் திருச்சி எம். கே ஷாகுல் ஹமீது உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

(படங்கள் – திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது)

# முஸ்லிம்களின் மீதான சந்தேகங்களை போக்கும் இருநூல்களின் வெளியீடு











**(இர்ஷாத் றஹ்மத்துல்லா)**

சம்பவங்கள் அப்போதே மறந்துவிடுக்கின்றன.சிலதை நாம் வரலாறாக பதிவு செய்வதன் மூலம் எமது எதிர்கால சமூகத்தின் தேடலுக்கு மிகவும் முக்கியமானதாக இருக்கும். இதனால் தான் எழுத்தாளர்கள் மிகவும் பிரசவ வேதனையினை அனுபவித்து அதனை புத்தகங்களாக வெளியிடுகின்றனர் என்பது யதார்த்தமாகும்.

இப்படியான புத்தகங்களின் பாதுகாப்பு என்பது அதற்கு அளிக்கப்படுகின்ற முக்கியத்துவத்தில் இருக்கின்றது.

இந்த முக்கியத்துவம் காலத்தினதும்,வரலாற்றினதும் தேவையினை கொண்டு வெளிவருகின்ற போது தான் வாசகர்கள் அதனை நுகர்கின்றனர்.

இன்றைய இந்த பதிவில் இது தொடர்பில் பார்ப்பது முக்கியம் என் கருதுகின்றேன்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் ஏற்பாட்டில் போரத்தின் ஏற்பாட்டின் கொழும்பு இலங்கை மன்றக் கல்லுரியில் அண்மையில் இடம் பெற்ற நூ ல் வெளியீடு ஒன்றில் கலந்து கொள்ளும் சந்தர்ப்பம் கிடைத்து.

இந்த வெளியீடானது ஆங்கிலத்தில் பேராசிரியர் ராஜன் ஹூல் அவர்களும், சிங்கள மொழியில் சிரேஷ்ட ஊடகவியலாளர் மஹிந்த ஹத்தகவினாலும் மொழி பெயர்ப்பு செய்யப்பட்ட (Srilnka Easter Tragedy-WHEN THE DEEP STATE GETS OUT ITS DEPTH) இதனை தமிழ் மொழிபெயர்ப்பு நூலாக மாற்றி "உயிர்த்த ஞாயிறு அனர்த்தம் மறைகரம் வெளிப்பட்ட போது" என்ற மகுடத்தில் சிரேஷ்ட ஊடகவியலாளரான என்.எம். அமீன் அவர்களும்,ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் (பா.உ) "நாங்கள் வேறானவர்கள் அல்ல மண்ணின் வேறானவர்கள் (முஸ்லிம்கள் மீது கட்டமைக்கப்பட்ட சந்தேகங்களை களைதல்) என்ற நூல்களும் கரம் கிட்டும் சந்தரப்பம் கிடைத்து.

இலங்கையில் அண்மைக்காலமாக பேசும் பொருளாகவும், ஆட்சி மாற்றங்களை கொண்டுவந்துள்ள பிரதான தொனிப் பொருளாக மாறிய சம்பவங்களுடன் பின்னிப் பிணைந்ததாகவும், தமிழ், சிங்கள மக்கள் மத்தியில் இலங்கை முஸ்லிம்கள் தொடர்பில் நீண்டு விரிந்து செல்லும் சம்பவங்களின் வெளிப்பாடாகவும் இந்த வெளியீடுகளை அவதானிக்க முடிந்தது.

என்.எம்.அமீன் சிற்நத கல்விமான் என்பதற்கு அப்பால் சமூகம் சார்ந்த விடயங்களில் மிகவும் பகுவமாகவும்,நிதானமாகவும் பணியாற்றக் கூடிய ஒருவர் என்பதில் எந்த சந்தேகமுமில்லை. குறிப்பாக மும்மொழிகளிலும் பணியாற்றக் கூடிய ஒருவராகவும்,இந்த ஆற்றலானது ஏனைய சமூகங்கள் மத்தியில் இஸ்லாமியர்கள் தொடர்பில் ஏற்படும் சந்தேகங்களை இலகுவாக புரிதலை ஏற்படுத்த மிகவும் முக்கியமாக அமைந்திருந்தது.

குறிப்பாக ஒரு நூலினை வெவ்வேறு மொழிகளில் வெவ்வேறு எழுத்தாளர்கள் அல்லது கட்டுரையாளர்கள் எழுதியிருப்பதினால் அவ்விரண்டு மொழயினையும் கவனமாக கையாண்டு அவர்கள் எதனை சொல்ல வருகின்றார்களோ அதனை அச்சொட்டாக தான் எழுதும் மொழியில் கொண்டுவருவது என்பது வெறும் வாய்ச்சவடல்கள் அல்ல என்பதை ஒரு மொழிப் பெயர்பாளன் என்ற வகையில் எனது அனுபவத்தில் கண்டுக் கொண்டதாகும்.

இதனை சரியாக செய்துள்ளார் என்.னம்.அமீன் என்பதை ஒரு எடுகோளாக நாம் எடுக்தாக வேண்டும். இந்த உயிர்த்த ஞாயிறு அனர்த்தம் மறைகரம் வெளிப்பட்ட போது நூலில் பொதிந்துள்ள அம்சங்கள் ஒரு படிப்பினையாகவும்,சமூகம் குற்றம் இழைத்ததா? சட்டத்தின் பாதுகாவலர்கள் தமது கடமையினை செய்ய தவறினார்களா ? அல்லது தமது பதவிகளை தக்க வைக்க அரசியல் வாதிகள் என்கின்றவர்கள் திட்டமிட்டு செய்ய சதியா ? என்ற பல கேள்விகளுக்கு என்.எம்.அமீன் அவர்களின் இந்த மொழிபெயர்ப்பு பதில் கூறுவதாக அமைந்துள்ளது.

இந்த நூலினை இலங்கை வாழ் ஒவ்வொரு பிரஜையும் நிச்சயம் வாசிப்பதன் மூலம் பல்வேறுபட்ட எமக்குள் காணப்படும் சந்தேகங்களுக்கு நிச்சம் பதில்களை கொண்டுவரும்.

அது போன்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் (பா.உ) "நாங்கள் வேறானவர்கள் அல்ல மண்ணின் வேறானவர்கள் (முஸ்லிம்கள் மீது கட்டமைக்கப்பட்ட சந்தேகங்களை களைதல்) என்ற நூல் பல்வேறு சட்ட நுனுக்கங்கள் பற்றி குறிப்பிட்டாலும்,சமூகத்தின் நம்மை நாமே அறியாத போது பிற சமூகத்தின் மீது விரல் நீட்டுவதன் மூலம் எதனையும் அடைய முடியாது என்கின்ற ஒரு தெளிவை கோடிட்டு காட்டியுள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் அவர்களினால் ஆங்கில மொழியில் எழுதப்பட்ட ( We ARE A PART, NOT APART – Demystifying Myths Against Muslims of Sri Lanka) நூலின் தமிழாக்கத்தை அவரே மொழி பெயர்ப்பு செய்துள்ளதுடன்,குறைந்ததுஇதற்க 5 வருடங்கள் சென்றுள்ளமை குறிப்பிடக் கூடியது.

வெறுமனே எடுத்தவுடன் மொழியாக்கம் செய்து புத்தகத்தினை வெளியீடு செய்வது என்பது நோக்கமாக அல்லாது இந்த மொழிப் பெயர்ப்பானது தனது எதனை மையப்படுத்தி இது எழுதப்பட்டதே இந்த சந்தேகங்கள் களையப்பட வேண்டும் என்பது தான் இறுதி இலக்காகும் என்கின்ற உதாரணத்தினையே இந்த நூலின் காலதாமதம் சுட்டிக்காட்டியுள்ளது.

குறிப்பாக இந்த நூலினை வாசிக்கின்ற போது ரவூப் ஹக்கீம் அவர்கள் கடந்த காலத்தில் பொது தலைப்புக்களில் பேசிய,பத்திரிகைகளில் வெளிவந்த, தொலைக்காட்சி விவாதங்களில் பங்கெடுத்து முஸ்லிம்கள் தொடர்பில் பெறும்பான்மை மக்கள் மத்தியில் எழுந்துள்ள சந்தேகங்களுக்கு தெளிவினை கொடுக்கும் வகையில் விஞ்ஞான மற்றும் ஆதார பூர்வமான நியாயாதிக்கத்தின் அடிப்படையில் சிந்திக்கின்றவர்களுக்கு எடுத்துக் கூறிய அம்சங்ளையும் இதில் நோக்க முடிகின்றது.

பல்வேறு தலைப்புக்களில் நெறிப்படுத்தப்பட்ட முறையில் கொரொனா ,உயிர்த்த ஞாயிறு தாக்குதல்,இலங்கையில் முஸ்லிம்களுக்கு எதிராக சிந்தணை ரீதியான செயற்பாடுகள் போன்று விடயங்களும், இது போன்று பெறும்பான்மை மக்கள் மத்தியில் ஊற்றப்பட்ட முஸ்லிம் சனத்தொனை பெருக்கம் சிங்கள மக்களின் சனத்தொகை பரம்பலை பாதிக்கும் என்ற விடயங்கள் தொடர்பில் வாசகர்களுக்கு ஒரு தெளிவினை வழங்கும் ஒன்றாக இது அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

வரவேற்புரை மற்றும் இந்த நூல் தொடர்பிலான அறிமுகத்தினை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும்,ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.எம். சுஹைர் அவர்களினாலும்,இந்த நூலின் விமர்சனத்தினை பேராதனை பல்கலைக்கழத்தின் விரிவுரையாளர் பேராசிரியர் எம்.எஸ்.எம்.அனஸ் நிகழ்த்தினார்.

அதே போன்று தமது சிங்கள மொழியாக்கம் தொடர்பில் சிரேஷ்ட ஊடகவியலாளர் மஹிந்த ஹத்தக்கவும்,விசேட உரையினை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும்,ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்,ஏ. சுமந்திரன் வழங்கினர்.

இந்த நூலின் பிரதிகள் - அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா செயலாளர் நாயகம் அஷ்ஷேக் அர்க்கம் மௌலவி, பிரதி சபாநாயகர் வைத்தியர் றிஸ்வி சாலி, ஜனாதிபதி சட்டத்தரணியுமான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.எ. சுமந்திரன், எம்.எம். சுகைர், பேராசிரியர் எம்.எஸ் அனஸ், திருச்சி சிரேஸ்ட ஊடகவியலாளர் சாகுல் ஹமீட், வைத்திய பேராசிரியர் றிஸ்வி சரீப், சிங்கள மொழி சிரேஸ்ட ஊடகவியலாளர் மகிந்த ஹத்தக்க ,முன்னாள் ஆளுநர் அசாத் சாலி உட்பட அனைத்து முக்கியஸ்தர்களுக்கும் வழங்கி வைக்கப்பட்டது. அத்துடன் ஏற்புரையினை நூலசிரியர்கள் ரவூப் ஹக்கீம், என்.எம் அமீன் ஆகியோர்களும் நிகழ்த்தினார்கள்.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்கள் மனோ கணேசன், நுவரெலியா பா.உறுப்பினர் திகாம்பரம், உதுமாலெப்பை, உட்பட முஸ்லிம் மீடியா போரத்தின் உறுப்பினர்கள் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர்கள், எழுத்தாளர்கள், பத்திரிகைகளின் ஆசிரியர்கள் வெளிநாட்டு தூதுவர்கள் ஆலயத்தின் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

(படங்கள் – அஸ்ரப் ஏ. சமட்)

# அனுராதபுரம் சல்காது மைதானத்தில் தேசிய மக்கள் சக்தியின் சுதந்திர தின நிகழ்வு





**(எம்.ரீ.ஆரிப்)**

77ஆவது தேசிய சுதந்திர தினத்தை முன்னிட்டு மறுமலர்ச்சி ஊர்வலத்துடன் (04) அநுராதபுரம் சல்காது மைதானத்தில் தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்களான பேராசிரியர் சேணா நாணயக்கார மற்றும் பி.டி.எம்.பலிஹேன ஆகியோரின் தலைமையில் நடைபெற்றது.
வடமத்திய மாகாண சபை , அனுராதபுரம் மாவட்ட செயலகம் , அனுராதபுரம் பொலிசார், மாநகர சபை என்பன இணைந்து இதனை ஏற்பாடு செய்திருந்தன.
ஆரோக்கியமான ஆற்றல் மிக்க குடிமக்களை உருவாக்குவதன் மூலம் உடல் தகுதி மற்றும் விளையாட்டுக்களின் மறுமலர்ச்சி மூலம் பொருளாதார,சமூக மற்றும் கலாச்சார வளர்ச்சியை அடைய முடியும் என்பதை சமூகமாக்கும் நோக்கில் இந்த மறுமலர்ச்சி நடைபயணம் நடைற்றது.
இதன் போது மாகாண பிரதான செயலாளர் ரஞ்சித் பிரேமநாத். ஜயசிங்க மாகாண அமைச்சின் செயலாளர்கள் அனுராதபுரம் மாவட்ட செயலாளர் ரஞ்சித் விமலசூரிய நிறுவனங்களின் தலைவர்கள் திணைக்களத் தலைவர்கள் அரச மற்றும் சிவில் அமைப்புக்களின் உறுப்பினர்கள் பிரதேசவாசிகள் மற்றும் பாடசாலை மாணவர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# ஒலுவில் பெரிய ஜும்ஆ பள்ளிவாசலில் இலங்கையின் 77 வது சுதந்திர தின நிகழ்வு





**(இஸட்.ஏ.றஹ்மான்)**

ஒலுவில் பெரிய ஜும்மா பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை ஏற்பாடு செய்த இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 77 வது சுதந்திரதின நிகழ்வு
“தேசிய மறுமலர்ச்சியில் அனைவரும் அணிதிரள்வோம் “எனும் தொனிப் பொருளில் ஒலுவில் ஜும்மா பள்ளிவாசலில் தலைவர் சிரேஷ்ட பொறியியலாளர் யு.ஆ. றாபி தலைமையில் நடைபெற்றது.
இதில் அதிதிகளாக ஒலுவில் கடற்படை முகாம் பொறுப்பதிகாரி லெப்டினட் கொமாண்டர் எல். பீ.எஸ்.எம்.பத்திரன , ஒலுவில் வைத்திய சாலையின் வைத்திய அதிகாரி ஏ.எல்.அலாவுதீன், ஒலுவில் பெரிய ஜும்ஆ பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை உறுப்பினர்களும் பொது மக்களும் கலந்து கொண்டனர். சுதந்திர தின உரை உபதலைவரும ஓய்வு நிலை அதிபருமான எம்.நசீர் நிகழ்த்தினார்.
இந் நிகழ்வின் போது ஒலுவில் ஜ/ம்மா பள்ளிவாசலில் இயங்கும் தாருத் தலபா அல்குர்ஆன் மனன கலாபீட மாணவர்களும் கலந்து கொண்டமை விசேட அம்சமாகும். பிறை குஆ அறிவிப்பாளர் கலைப் பிறை து.வஹாப்தீன் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கியதுடன் ஊடக அனுசரணையை ஒலுவில் மீடியா வழங்கியது.

# ஓட்டமாவடி பிரதேச செயலகத்தில் சுதந்திர தின நிகழ்வு





**(எஸ்.எம்.எம்.முர்ஷித்)**

நாட்டின் 77வது சுதந்திர தினத்தை முன்னிட்டு ஓட்டமாவடி பிரதேச செயலகம் ஏற்பாடு செய்த நிகழ்வுகள் கடந்த 04ஆம் திகதி இடம்பெற்றது.
பிரதேச செயலாளர் ஏ.தாஹிர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், தேசியக்கொடி ஏற்றப்பட்டு தேசியக்கீதம் இசைக்கப்பட்டது.
அத்துடன் தேசத்தைக்கட்டி எழுப்ப ஜனாதிபதியின் கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டம் தொடர்பிலும் அதற்கு நாம் ஆற்ற வேண்டிய கடப்பாடு தொடர்பிலும் பிரதேச செயலாளரினால் தெளிவூட்டப்பட்டது.
இந்நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் எம்.ஆர்.ஷியாவுல் ஹக், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.ஏ.எம்.றியாஸ், நிருவாக உத்தியோகத்தர் ஜாஹிதா ஜலால்தீன் மற்றும் பல உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

# புத்தளம் கொழும்பு முகத்திடலில் 77 வது சுதந்திர தின நிகழ்வுகள்





**( சியாஜ், சனூன்)**

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 77வது சுதந்திர தினத்தை முன்னிட்டு சுதந்திர தின நிகழ்வுகள் புத்தளம் மாவட்ட செயலாளர் எச்.எம்.எஸ்.பி.ஹேரத் தலைமையில் புத்தளம் மாவட்ட செயலகம் மற்றும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் பங்கு பற்றுதலுடன் புத்தளம் கொழும்பு முகத்திடலில் இடம்பெற்றது.
ஒருங்கிணைப்பு குழுவின் இணைத்தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் கயான் ஜானக தேசியக் கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார். புத்தளம் மாவட்ட செயலாளர் எச்.எம்.எஸ். பி.ஹேரதின் அழைப்பின் பேரிலே அவர் வருகை தந்திருந்தார்.
மறைந்த தேசிய வீரர்களுக்கு ஒரு நிமிட நேரம் மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது.
ஆனமடு, கருவலகஸ்வெவ, மஹாகும்புகடவல மற்றும் புத்தளம் கலாச்சார மத்திய நிலைய மாணவர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களின் கலை கலாச்சார நிகழ்வுகளும் அரங்கேற்றப்பட்டன.
புத்தளம் சென் அன்றூஸ் பாடசாலை மாணவர்கள் தேசிய கீதம் இசைக்க புத்தளம் ஆனந்தா தேசிய பாடசாலை மாணவர்கள் தேசிய மறுமலர்ச்சி ஆசீர்வாத பாடலை பாடினார்.
பிரதான உரையினை புத்தளம் மாவட்ட செயலாளர் ஹேரத் வழங்கினார். புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான எச்.எம்.கயான் ஜானக, முஹம்மது பைசல் ஆகியோரும் உரையாற்றினர்.
இந்த 77 வது சுதந்திர தின வைபவ நிகழ்வில் புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், சமய தலைவர்கள், அரசாங்க அதிகாரிகள், கல்வியியலாளர்கள், முப்படைகளின் உயர் அதிகாரிகள், புத்தளம் நகர சபையின் அதிகாரிகள், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் அதிகாரிகள், பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட பொதுமக்கள் பலரும் கலந்துகொண்டனர்.

# நாவிதன்வெளி பிரதேச செயலகத்தில் இலங்கையின் 77ஆவது சுதந்திர தின நிகழ்வு இடம்பெற்றது

**(ஏ.எச்.எம். ஹாரீஸ்)**

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் 77ஆவது சுதந்திர தின நிகழ்வு நாவிதன்வெளி பிரதேச செயலகத்தில் அண்மையில் (04) இடம்பெற்றது.
நாவிதன்வெளி பிரதேச செயலாளர் ராகுலநாயகி சஜிந்ரன் தலைமையில் ஏற்பாடு செய்திருந்த இந்நிகழ்வில் தேசிய கொடி ஏற்றப்பட்டு நிகழ்வுகள் ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன், தேசிய கீதமும் ஒலிக்கச் செய்யப்பட்டது. அதன் பின்னர் நாட்டிற்காக உயிர் நீத்தவர்களுக்காக இரண்டு நிமிடம் மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது.
இதனை தொடர்ந்து நாவிதன்வெளி பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கு இவ்வாண்டிற்கான அலுவலக சீருடை அறிமுகம் செய்து வைக்கப்பட்டதுடன், இலங்கை திருநாட்டின் இன மத பல்லினத்தன்மையை பிரதிபலிக்கும் வகையில் கலாசார உடையில் பாடசாலை சிறுவர்களும் பங்குபற்றி இருந்தமை விஷேட அம்சமாகும்.
மேலும் சுதந்திர தினம் தொடர்பில் பிரதேச செயலாளர் விசேட உரை நிகழ்த்தினார். அதனை தொடர்ந்து பிரதேச செயலக வளாகத்தில் மரக்கன்று நடுகையும் இடம்பெற்றது. அத்துடன் மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் விசேட தேவையுடைய நபர்களுக்கான உபகரணங்களை வழங்கி வைக்கும் வேலைத் திட்டத்தின் ஊடாக நாவிதன் வெளி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான சக்கர நாற்காலி, மூக்கு கண்ணாடி, ஊன்றுகோல் போன்ற உபகரணங்களும் இதேவேளை வழங்கி வைக்கப்பட்டது.
இந்நிகழ்வில் நாவிதன்வெளி பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் பே. பிரணவரூபன், கணக்காளர் க. றிஸ்வி யஹ்சர், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் தி. கிருபைராஜா, நிருவாக உத்தியோகத்தர் ஓ. கே. கீர்த்தி குசுமிந்த, நிருவாக கிராம உத்தியோகத்தர் மனோஜ் இந்ரஜித், சமுர்த்தி தலைமைபீட முகாமையாளர் செ. சிவம் ஆகியோரும் சகல பிரிவுகளின் பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள், அலுவலக, வெளிக்கள உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அலுவலக சேவை உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# தர்கா நகர் நஜீப் ஹாஜியார் கல்வி நிலையத்தில் சுதந்திர தின நிகழ்வு

( பீ.எம் முக்தார்)

தர்கா நகர் நஜீப் ஹாஜியார் கல்வி நிலையம் ஏற்பாடு செய்த இலங்கையின் 77வது சுதந்திர தின வைபவமும், தர்கா நகரில் உள்ள மூன்று பாடசாலைகளில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் (2024) சித்தியடைந்த மாணவர்களை கௌரவிக்கும் விழாவும் பெப்ரவரி 4 ஆம் திகதி மேற்படி கல்வி நிலையத்தில் நடைபெற்றது.

நஜீப் ஹாஜியார் கல்வி நிலைய ஸ்தாபகர் கலாநிதி. நஜீப் ஹாஜியார் பின் அமீர் ஆலிம் பிரதம அதிதியாக கலந்து கொண்டு தேசிய கொடியை ஏற்றி வைத்து நிகழ்ச்சிகளை ஆரம்பித்து வைத்தார்.

தர்கா நகர் ஜெம்மியத்துல் உலமா சபை செயலாளர் அஷ்ஷெய்க் எம். எச்.எம்.பர்ஹான் ஹனீபா (நளீமி) விசேட பேச்சாளராக களந்து





கொண்டார். நாட்டின் சுதந்திரத் துக்காக முஸ்லிம்கள் செய்த பங்களிப்பு குறித்தும் நாட்டுக்கு விசுவாசமான ஒரு சமூகமாக இருந்து முஸ்லிம்கள் நாட்டின் முன்னேற்றத்திற்காகவும் அபிவிருத்திக்காகவும் ஆற்றி வரும் சேவைகள் குறித்து ஞாபகமூட்டினார்.

கலாநிதி நஜீப் ஹாஜியார் உரையாற்றும் போது முஸ்லிம்கள் அன்று முதல் இன்று வரை நாட்டுப் பற்றுள்ளவராகவும் இருந்து வருகின்றனர். நாட்டின் சுதந்திரத் துக்காக சிங்கள தமிழ் தலைவர்களுடன் முஸ்லிம் தலைவர்கள் தியாகத்துடன் பங்களிப்புச் செய்தனர் என்றார்.

ஸாஹிரா ஆரம்ப பாடசாலை அதிபர் முஹம்மது ஸப்வான் உரையாற்றும் போது தர்கா நகர் நஜீப் ஹாஜியார் கல்வி நிலையம் சமூகத்தின் கல்வித்துறை முன்னேற்றத்திற்காக ஆற்றி வரும் சேவைகள் மகத்தானது. கடந்த பல வருடங்களாக தேசிய பரீட்சைகளில் சித்தியடைந்த மாணவர்களை பாராட்டி கௌரவித்து பரிசில்களை வழங்கி வருவதை பாராட்ட வேண்டும் என்றார்.

இந்நிகழ்வில் மூன்று பாடசாலைகளினதும் அதி-பர்கள், சித்தியடைந்த மாணவர்கள் அவர்களது பெற்றோர்கள், தர்கா நகர் முஅய்யிதுல் இஸ்லாம் அரபுக் கல்லூரி மாணவர்கள், ஊர் பிரமுகர்கள், நஜீப் ஹாஜியார் கல்வி நிலைய பணிப்பாளர், சபை உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# அல் - கஸ்ஸாலியில் பாத்திமா திக்ரா சித்தி

( ஐ. ஏ. காதிர் கான் )

பண்டாரகம - அட்டுலுகம அல் - கஸ்ஸாலி முஸ்லிம் ஆரம்ப வித்தியாலயத்தில் தரம் ஐந்தில் கல்வி கற்கும் மாணவி எம்.எப். பாத்திமா திக்ரா, தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் 144 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார்.

வித்தியாலய அதிபர் அஷ் - ஷெய்க் எம்.என்.எம்.ஜொலிபர் (நளீமி), வகுப்பாசிரியை ஓ.எச். ரஹ்மா ஆகியோரது சிறந்த வழிகாட்டலின் கீழ் சித்தியடைந்துள்ள இம்மாணவி,



அட்டுலுகமையைச் சேர்ந்த முஹம்மட் பைரூஸ் - ஜென்னத்துல் பாத்திமா தம்பதியினரின் புதல்வியாவார்.

# கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளருக்கு பிரியாவிடை





(எஸ்.எம்.எம்.முர்ஷித்)

எட்டு ஆண்டுகளாக கோறளைப்பற்று மத்தி - வாழைச்சேனைப் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளராகப் பணிபுரிந்து ஏறாவூர் நகர பிரதேச செயலகத்திற்கு இடமாற்றம் பெற்றுச் செல்லும் எஸ்.எச்.முஸம்மிலுக்கு பிரியாவிடை நிகழ்வு அண்மையில் (31) பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

பிரதேச செயலக நலன்புரி அமைப்பின் ஏற்பாட்டில் உதவிப்பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.றமீஸா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பிரதித்திட்டமிடல் பணிப்பாளர் எச்.எம்.எம்.றுவைத், கணக்காளர் ஏ.மோகனகுமார், நிருவாக உத்தியோகத்தர் ஏ.தாஹிர், சமூர்த்தி பிரிவின் தலைமை முகாமையாளர் எஸ்.ஏ.எம்.பஷீர், சமூக சேவை உத்தியோகத்தர் ஏ.நஜீம், கலாசார உத்தியோகத்தர் எம்.எச்.எம்.நியாஸ், கிராம சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் செயலகத்தின் ஏனைய உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இதன் போது, பிரதேச செயலாளருக்கு நினைவுச்சின்னமும் பரிசில்களும் வழங்கி, பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# வினாத்தாள் மோசடி பதில் அதிபருக்கு விளக்கமறியல்

(எம்.ரீ.ஆரிப் அநுராதபுரம்)

வடமத்திய மாகாணத்திலுள்ள பாடசாலைகளில் 2024 இறுதி தவணைப்பரீட்சையில் 11 ஆம் தரம் சிங்களம் மற்றும் பௌத்த வினாத்தாள்களை தம்புத்தேகம பிரதேசத்தில் உள்ள உதவி வகுப்பு ஆசிரியை ஒருவருக்கு மிகவும் சூசகமான முறையில் கையடக்க தொலைபேசி வட்ஸ்அப் ஊடாக அனுப்பி வைத்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பதில் அதிபரை விளக்கமறியல் வைக்குமாறு அனுராதபுரம் பிரதம நீதிவான் நாலக சஞ்சீவ ஜயசூரிய உத்தரவிட்டுள்ளார்.

இந்த மோசடி மூலம் அரசுக்கு ஒரு கோடியே பதினைந்து இலட்சம் ஷரூபாவுக்கு மேல் இழப்பு ஏற்பட்டுள்ளதாக நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது.

இந்த விடைத்தாள் மோசடியில் ஈடுபட்டதாக சந்தேகிக்கப்படும் ஏனைய சந்தேக நபர்களை உடனடியாக கைது செய்து அனுராதபுரம் நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு அனுராதபுரம் கோட்ட குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு பிரதான நீதிவான் மேலும் உத்தரவிட்டுள்ளார்.

அனுராதபுரம் தம்மன்னாகுளம் பகுதியைச் சேர்ந்த எத்தன்கல்ல ராகுல வித்தியாலயத்தில் பதில் அதிபராக கடமையாற்றும் எம்.எம்.கருணாரத்ன ராஜபக்ச என்பவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# சம்மாந்துறை மபாசா வித்தியாலயம் புலமைப் பரிசில் பரீட்சையில் வரலாற்றுச் சாதனை

( ஐ. ஏ. காதிர் கான் )

சம்மாந்துறை மபாசா வித்தியாலத்தில் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் சித்தி பெற்று ஐந்து மாணவர்கள் வரலாற்றுச் சாதனை படைத்துள்ளனர்.

ஏ.ஆர். அப்துல்லாஹ் - 151,
ஏ.எச். அலீனா அசானி - 150,
எம். லிபா ஷைனப் - 149,



எப்.எப். ஹிபா - 142,
எம்.எஸ். சீறத் ஜானி - 139

ஆகியோரே, இவ்வாறு வரலாற்றுச் சாதனை பெற்றுள்ள மாணவச் செல்வங்களாவர்.

இச்சிறப்பு நிகழ்வில், வித்தியாலய அதிபர் கே.கே. அஹமட், ஆசிரியர்களான எம்.எல். அமீர், ஏ. பாஹிமா ஆகியோர் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.





அனுராதபுரம் சாஹிரா கல்லூரியில் 2025 ஆம் கல்வி ஆண்டுக்கான முதலாம் தர மாணவர்களை இணைத்துக் கொள்ளும் வித்தியாலய நிகழ்வு அதிபர் ஜே.ஏ.அசாத் மொகமட் தலைமையில் நடைபெற்ற போது.

(எம்.ரீ.ஆரிப் அநுராதபுரம்)

# கட்டுக்களை பள்ளியில் சுதந்திர தின நிகழ்வு

(இக்பால் அலி)

77 வது சுதந்திர தின வைபவம் கண்டி கட்டுக்கலை ஜும்ஆப் பள்ளிவாசலில் பள்ளிவாசல் பரிபாலன சபையின் செயலாளர் கே. ஆர். ஏ. சித்தீக் தலைமையில் இடம்பெற்றது.

இதன் போது அகில இலங்கை ஜம்மிய்யதுல் உலமா சபையின் உப தலைவர் மௌலவி எச். உமர்தீன், அல் புர்க்கானிய்யா அரபுக் கல்லூரி மாணவர்கள்,



உலமாக்கள், பள்ளிவாசல் நிர்வாகிகள் , அரச உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டதை படங்களில் காணலாம்.

# பதுளை எல்வட்டன் தமிழ் வித்தியாலயத்தில் நான்கு மாணவர்கள் சாதனை!

(அப்துல் வாஹிட் ஏ. குத்தூஸ்)

பதுளை எல்வட்டன் தமிழ் வித்தியாலயத்தில் நடந்து முடிந்த ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையின் பெறுபேறுகளின்படி இம்முறை பரீட்சைக்கு தோற்றியிருந்த 16 மாணவர்களுள் பீ .கிசோபன் (167), எஸ் ஐஸ்வின்யா (156), பீ பிரகன்யா (146), எம்.யுபீனா (141) ஆகிய நால்வர் சித்தியடைந்துள்ளதாக அதிபர் ஏ.ஜே. எம் அஷாட் தெரிவித்தார்.

ஜே. ஓவினாஸ் (138), ரீ. தஸ்மிகா (137) எஸ் . கியாஸ் (137) ஆகிய விட்டுப் புள்ளிகளுக்கு அண்மைத் துள்ளதாகவும் ஏனைய அனைத்து மாணவர்களும் 100 வீத பெறுபேற்றைப் பெற்றிருப்பதாகவும் அதிபர் அஷாட் மேலும் குறிப்பிட்டார் .

கடந்த வருடமும் புலமை பரிசில் பரீட்சையில் வலய மட்டத்தில் முதலிடத்தையும் தேசிய தமிழ் தினப் போட்டியில் ஆக்கமும் எழுத்துப் போட்டியில் நான்காம் இடத்தையும், இவ் வருடம் பேச்சுப் போட்டியின் மூன்றாம் இடத்தையும் பெற்றமை குறிப்பிடத்தக்கது .

# இலங்கையின் 77 ஆவது சுதந்திர தின வைபவம் கண்டி மீராம் மக்காம் பள்ளியில்





கண்டி மீராம் மக்காம் பள்ளி வாசல், கண்டி நகர் பள்ளி வாசல்கள் சம்மேளனம், கண்டி நகர் ஜம்மிய்யது உலமா சபை ஆகிய சங்கங்கள் இணைந்து நடத்திய இலங்கையின் 77வது சுதந்திர தின வைபவம் பள்ளியில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கண்டி உதவி இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் உயர் ஸ்தானிகர் சரன்னியா கலந்து கொண்டு சிறப்பித்தார். தேசிய கொடியை கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான தனுர திசாநாயக, ரியாஸ் பாரூக் ஆகியோர் ஏற்றி வைத்தார்கள்.

மௌலவி அஸ்லம் சிங்களத்தில் தேசிய சுதந்திர தினத்திற்கு முஸ்லிம் தலைவர்கள் ஆற்றிய பங்களிப்புக் குறித்து உரையாற்றினார்.

இதில் அகில இலங்கை ஜம்மிய்ய துல் உலமா சபையின் தலைவர் ரிஸ்வி முப்தி. கண்டி மாநகர ஆணையாளர், இந்திகா குமாரி அபேசிங்க, முன்னாள் மாவட்ட செயலாளர் சந்தன தென்னகோன், இராணுவ மற்றும் பொலிஸ் உயர் அதிகாரிகள் ஆகியோர்களுடன் கண்டி மிராம் மக்கம் பள்ளிவாசல் தலைவர் இலாஹி ஆப்தீன். கண்டி நகர் பள்ளிவசால்கள் சம்மேளனத்தின் தலைவர். கே. ஆர் ஏ. சித்தீக் கண்டி சிட்டி ஜம்மிய்யதுல் உலமா சபைத் தலைவர் மௌலவி பாயிஸ் தமிழ் சிங்கள. வர்த்தகத் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

ரம்மிய லங்கா அமைப்பின் பணிப்பாளர் உறுப்பினர் ஏ. ஆர். எம். உவைஸ் அவர்களினால் கண்டி மாநகர சபையின் ஆணையாளர் இந்திகா குமாரி அபேசிங்க அவர்களிடம் 50 மரக்கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டன.







அனுராதபுரம் அசறிக்கம முஸ்லிம் வித்தியாலயத்தில் முதலாம் ஆண்டு மாணவர்களை இணைக்கும் வித்தியாலய நிகழ்வு அதிபர் ஏ.எம்.நியாஸ் தலைமையில் நடைபெற்றது. இதன் போது மாணவர்களை அழைத்து செல்வதனையும் அதிதிகள் உரையாற்றுவதையும் மாணவர்களுக்கு பாடப் புத்தகங்கள் வழங்கி வைக்கப்படுவதையும். வகுப்பறை திறந்து வைக்கப்படுவதையும் பாடசாலை வரலாற்றில் முதன் முதலாக புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவிக்கு பரிசில் வழங்குவதையும் படத்தில் காணலாம்.

(படங்கள்:- எம். ரீ ஆரிப் அநுராதபுரம்)

# வாழைத்தோட்ட அல் முனீராவில் குர்ஆன் ஓதி முடித்த மாணவர்களுக்கு கௌரவம்





(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

கொழும்பு 12 வாழைத்தோட்டம் அல் மஸ்ஜிதுல் முனீர் மஅல் மத்ரஸாவின் குர்ஆனை ஓதி முடித்த மாணவர்களை கௌரவித்து சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை பள்ளிவாசலின் தலைவர் ஜஹாங்கிர் அலி தலைமையில் இடம் பெற்றது.

இதன்போது குர்ஆனை முழுமையாக ஓதி முடித்து வெளியேறும் மாணவர்களினால் மத்தரஸாவின் மத்ரஸா கீதம் பாடப்பட்டதுடன் அந்த மாணவர்களின் ஹஸீதாக்கள், தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் இஸ்லாமிய பேச்சுக்கள், ஹதீஸ் விளக்கவுரைகள், இஸ்லாமிய கீதங்கள் என்பன சிறப்பாக இடம் பெற்றன.

இதன்போது குர்ஆனை முழுமையாக ஓதி முடித்து வெளியேறும் 24 மாணவர்களுக்கு அதிதிகளால் நினைவுச் சின்னங்கள் அணுவித்து சான்றிதழ்களும் பரிசுப் பொருட்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன் மத்ரஸாவில் நீண்ட காலமாக மாணவர்களுக்கு புனித குர்ஆனை ஓதிக் கொடுத்தும் இஸ்லாமிய பாடங்களை கற்றுக் கொடுத்தும் கடமையாற்றி வரும் உலமாக்கலான அதிபர் மௌலவி எம்.எம்.எம்.ரயிசுதீன் (தீனி), சிரேஸ்ட ஆலோசகர் மௌலவி எம்.ஏ.எம்.சிஹாப்தீன் (தீனி), மௌலவி எம்.ஐ.எம்.முஸம்மில் (பஹ்ஜி), பிரதி அதிபர் மௌலவி எம்.என்.எம்.சிபான்(றிழ்வானி) ஆகியோர் அவர்களின் சேவையைப் பாராட்டி பொன்னாடை போர்த்தியும் நினைவுச்சின்னங்களும் பரிசில்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

# பேருவளை இக்ராஃ வில் தேசிய தின நிகழ்வு





( பீ.எம் முக்தார்)

பேருவளை சீனன்கோட்டை இக்ராஃ தொழில் பயிற்சி நிறுவனம் ஏற்பாடு செய்த 77 வது சுதந்திர தின நிகழ்வு நிறுவன முற்றவெளியில், நிறுவன பணிப்பாளர் முஹம்மத் ரமீஸ் தலைமையில் நடைபெற்றது. பயிற்சி மாணவர்கள், விரிவுரையாளர்கள், ஊழியர்கள் என பலரும் நிகழ்வில் பங்குபற்றினர்.

# கற்பிட்டி ஜென்னத்துல் அஸாபீர் பாலர் பாடசாலையின் கால்கோள் விழா





(சியாஜ், சனூன்)

கற்பிட்டி ஜென்னத்துல் அஸாபீர் பாலர் பாடசாலையின் புதிய மாணவர்களை வரவேற்கும் கால்கோள் விழா பாலர் பாடசாலையின் அதிபர் எம்.ஜே.என் பாஹீமா தலைமையில் பாலர் பாடசாலை வளாகத்தில் இடம்பெற்றது.

இந் நிகழ்வின் அதிதிகளாக கற்பிட்டி பிரதேச செயலகத்தின் பாலர் பாடசாலையின் பொறுப்பதிகாரி எம்.நிப்ராஸ், ஜென்னத்துல் அஸாபீர் பாலர் பாடசாலையின் ஆலோசகர் ஏ.ஆர்.எம் முஸாதீக், கிராம உத்தியோகத்தர்களான எம். பீ.எம் அர்ஷத், பாத்திமா பர்வின் மற்றும் மஹ்தி பவுண்டேஷன் பணிப்பாளர் ஏ.ஆர்.எம் முஸம்மில் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# புத்தளம் இந்து கல்லூரியில் இடம்பெற்ற இலவச கணிதப் பாட கருத்தரங்கு



(சியாஜ், சனூன்)

புத்தளம் இந்து மத்திய கல்லூரியில் இம்முறை கல்வி பொதுத் தராதர சாதாரண தர பரீட்சை எழுத உள்ள மாணவர்களுக்கான இலவச கணிதப் பாட கருத்தரங்கு தேசத்தின் குரல் அமைப்பின் அனுசரனையில் பாடசாலையின் அதிபர் பீ.ஆர் தம்பிதுறை தலைமையில் நடைபெற்றது .

ஆயிரம் மாணவர்களுக்கு இலவச கணிதக் கருத்தரங்கு என்னும் வேலைத்திட்டத்தின் ஊடாக ஆரம்பிக்கப்பட்டுள்ள இத்திட்டத்தின் ஊடாக இடம்பெற்ற மூன்றாவது கருத்தரங்கின் விரிவுரையை பாடசாலையின் கணித பாட ஆசிரியர் எம் ட. எம் இம்ரான் ஹூசைன் மேற்கொண்டார்.

இதில் தேசத்தின் குரல் அமைப்பின் தலைவர் எப்.எம் பாசீல், பிரதித் தலைவர் ஹிஜாஸ் மரைக்கார், உயர்பீட உறுப்பினர்களும், ஆலோசகர்களுமான ஏ.ஏ தாரிக், ஏ.எம் அனீஸ் மற்றும் ஒபேட் அமைப்பின் தலைவர் எம். டி.எம் நபீல் ஆசிரியர் ஆகியோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# குப்பியாவத்தை அல் ஹிஜ்ராவில் சுதந்திர தின நிகழ்வு





(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

பொரல்ல அஹதிய்யாவும் இஸ்லாமிய கல்வி நிலையமும் குப்பியாவத்தை அல் ஹிஜ்ரா வித்தியாலயத்துடன் இணைந்து ஏற்பாடு செய்திருந்த இலங்கையின் 77வது சுதந்திர தின நிகழ்வு குப்பியாவத்தை அல் ஹிஜ்ரா முஸ்லிம் வித்தியாலயத்தின் முன்றலில் நடைபெற்றது.

அஹதிய்யா பாடசாலை அதிபர் சிப்லி ஹாசிம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அல்ஹிஜ்ரா பாடசாலை அதிபர் ஜெஸ்மின் பிஸ்ருல் ஹாபி பிரதம அதிதியாக கலந்து கொண்டிருந்தார். வரவேற்புரையை அஹதிய்யா அதிபர் ஷிப்லி ஹாசிமும் பிரதம அதிதி உரையை ஜெஸ்மின் பிஸ்ருல் ஹாபியும் விஷேட உரைகளை சிரேஷ்ட ஊடகவியலாளர்களான அஹமட் முனவ்வர், ஏ.எஸ். எம்.ஜாவித் ஆகியோர்கள் உரையாற்றினர்.

இதன் போது தேசிய ஒருமைப்பாட்டு பிரதி அமைச்சர் முனீர் முளப்பரின் ஊடக செயலாளர் முஸாரிப் மற்றும் பெற்றோர்கள் மாணவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

# கரம்பையில் இடம்பெற்ற சுதந்திர தின நிகழ்வு

(சியாஜ், சனூன்)

இலங்கையின் 77 வது சுதந்திர தினத்தை முன்னிட்டு கற்பிட்டி , கரம்பையில் கொடியேற்ற நிகழ்வும் சிரமதான வேலைத்திட்டமும் (04) கரம்பை கிராம உத்தியோகத்தர் காரியாலயத்தில், கிராம அலுவலர் தலைமையில் இடம்பெற்றது.

இன் நிகழ்வில் நுரைச்சோலை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, கிராம உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர்,



சமூர்த்தி உத்தியோகத்தர் மற்றும் கரம்பை சமூக பாதுகாப்பு குழு அமைப்பினரும் கலந்து சிறப்பித்தமையும் குறிப்பிடத்தக்கது.




நாச்சியாதீவு பர்வீன்

# தன்னை புதுப்பித்துக்கொண்டே இருக்கும் கவிஞர் யுகபாரதி

**ஆசிப் மீரான்**
**(டுபாயிலிருந்து...)**

தன்னை புதுப்பித்துக்கொண்டே இருப்பது ஒரு படைப்பாளிக்கு இன்றியமையாத செயல். சங்கத் தமிழில் மூழ்கித் திளைப்பவர்களுக்கு நவீனக் கவிதைகளோடு பெரிய ஈடுபாடு இருக்காது. போலவே நவீனக் கவிஞர்களில் பெரும்பாலானோருக்கு மரபிலோ, தமிழின் தொன்மக் கவிதைகள் மீதோ ஆர்வமிருக்காது.

ஆனால், திரைப்படங்களுக்குப் பாடலெழுதும் அவசரங்களுக்கிடையிலும் தமிழின் தொன்மத்தையும், அதன் நவீனத்தையும் ஒருங்கே ஊன்றிக் கவனிக்கும் ஆற்றலையும், இரண்டையும் மிக இலகுவாகக் கையாளும் திறமையையும் மக்கள் கவிஞர் யுகபாரதியிடம் பேசும் ஒவ்வொரு பொழுதிலும் கண்டிருக்கிறேன்.

“செம்புலப் பெயல் நீர் போல” என்று வரும் சங்கப் பாடலில் வரும் செம்புலத்திற்கு வழக்கமாக வழங்கப்படும் உரை தவிர்த்து, வேறு நுட்பமான காரணம் இருப்பதை, வெகு அண்மையில் பஹ்ரைன் பாரதி தமிழ்ச்சங்கத்தில் அவர் ஆற்றிய உரையின் போது கேட்டு வியந்தேன்.

ஒரு கன அடி குழி வெட்டி அந்தக் குழியை மூடும்போது ஒரு கைப்பிடி அளவோ அல்லது அதை விட சற்றுக் குறைவாகவோ மண் மிகுந்து விட்டால் அது வன்புலமாம். ஆனால் அதுவே, குழியை நிரப்புகையில் மண் குறைந்து விட்டால் அது மென்புலமாம். குறைவோ கூடுதலோ இல்லால் சம அளவில் மண் இருப்பதுதான் செம்புலம். எனவே, ஏற்றத் தாழ்வுகளின்றி இருமனங்கள் ஒன்றிணைவதையே அத்தனை நுட்பமாகச் “செம்புலப் பெயல் நீர் போல“ என்று பாடியிருக்கிறார்கள் நம் மூத்தோர் என்ற செய்தி நிச்சயம் புதிதுதானே?!

இப்படி சங்கத் தமிழுக்குள் மூழ்கி ”மேல்கணக்கு” நூலெழுதி வியக்க வைக்கும் அதே நேரத்தில், இக்காலத்தவர்களின் தேவைக்கேற்ப கவிதைகள் புனைவதையும் விட்டுவிடவில்லை அவர்.

“முகத்துக்குத்தானென்ற போதும்
நக இடுக்குகளில்
சிக்கிக் கொள்ளும்
மஞ்சளளவாவது
சிரித்திருக்கலாம் நீ”

என்று அவர் காட்டும் எளிய வாழ்வியல் உவமைகளை அவரது கவிதைகளில் வெகுவாக வியந்திருக்கிறேன்.

அண்மையில் குமுதம் இதழில் தொடராக வெளியான அவர் எழுதிய காதல் கவிதைகளின் தொகுப்பாக, ”மஹா பிடாரி” என்ற நூல் வெளியிடப்பட்டிருக்கிறது. காதலர்களின் தினமான பெப்ரவரி 14 ஆம் தேதி விகடன் காட்சி ஊடகம் வழியாக அந்நிகழ்வு வெளியாகவிருக்கிறது.

வழக்கம் போல, புத்தகம் அச்சிட்ட மை காயும் முன்னரே சூடாக ”மஹா பிடாரி”யை வாசிக்கும் வாய்ப்பைப் பெற்றேன்.

“இரண்டு தெரு
தள்ளி நடந்தால்
உன் வீடு வந்து விடும்
இடைப்பட்ட தூரத்தில்
எத்தனை மரங்களோ
அத்தனையிலும் என் காதல்
அமர்ந்திருக்கிறது
பகலில் காக்கையாக
இரவில் ஆந்தையாக”


***

”ரங்கராட்டினக்காரர்
ஊருக்குள் வந்த பிறகே
திருவிழா களை கட்டும்
ஒரு சுற்றுக்கு எவ்ளோ ரூபா எனச்
சின்னஞ்சிறுசுகள் கேட்க
இருப்பதைக் கொடுத்தால்
போதுமென்பார்
இருந்த மனசை
உன்னிடம் கொடுத்து விட்டு
சுற்றிக் கொண்டிருக்கிறேனே
அப்படி”

****

படிமங்கள், உள்ளுறை உவமைகள், உதவாக்கரை சொற்திணிப்புகளின்றி எளிய வாசகனையும் ஈர்க்கப் போதுமான அன்றாட வாழ்வியலிலிருந்தே எடுத்தாளப்படும் கவிதைகளோடு இந்தக் கவிதைத் தொகுப்பும் பேசப்படும்.

“பிடாரி“யென்றால் பெண் தெய்வமென்றறிந்தேன். ”மஹா பிடாரி”களின்றி காதலேது? காதலன்றி கவிதைதானேது?




## என் செல்லக்குட்டி

வெண்பஞ்சு பொம்மையாய்
வெட்ட வெளியிலும்
வீட்டினுள்ளும்...
அலைந்து திரியும்
அவனழகு!

மாயம் செய்யும்
மாணிக்க விழிகள்!
எம்மைப் பார்த்ததும்
ஓடோடி வந்திடுவான்!

கையிலே பொதி
கண்டால் போதும்...
ஆகாரம் என்று
ஆசையாய்த் துள்ளிக் குதிப்பான்!

மீன் வாசனை
மூக்கைத் துளைக்கும்
பொழுதெல்லாம்...
பின்பக்க பலகணி
வழியே...
எகிறிக் குதித்து
எட்டிப் பார்ப்பான்!

காற்றோட்டம் காண
கதவைத் தான் கொஞ்சம்
திறக்க முடியவில்லை!
கத்தியபடி...
கால்களுக்குள்ளே
வட்டமிட்டுக் கொண்டு
இருப்பான்!

என்ன செய்வது...
அவனோடு போராடித்தான்
ஆக வேண்டும்!
சிறுபிள்ளை தானே
அவனும்!
வீட்டுக்கு வரும்
உறவுக்கார பசங்களும்
அவனை வேண்டிக்
கெஞ்சிய நிலையில்!

முடியாது என்று...
முணுமுணுத்த படி நானும்!
அன்னையோடு இருக்கும்
அவனைப் பிரிக்க...
என் மனம்
இடம் கொடுக்கவில்லை!

தாயோடு உள்ளவரை தான்...
சேய்க்குப் பாதுகாப்பு என...
அவர்களிடம் கண்ணீருடன்
மொழிந்தேன்.

**பயாஸா பர்வீன்**
**பலகத்துறை.**

# மாணவர்களுக்கு நெகிழ்ச்சியான நிதிவசதியளிப்பினூடாக வலுவூட்டுவதற்கு Bristol Institute உடன் அமானா வங்கி கைகோர்ப்பு

மக்களுக்கு நட்பான கல்வி நிதிவசதியளிப்பு தீர்வுகளை பெற்றுக் கொடுப்பதற்காக அமானா வங்கி Bristol Institute of Business Management (BIBM) உடன் கைகோர்த்துள்ளது. அதன் மூலமாக, ஐக்கிய இராஜ்ஜியத்தின் West of England (UWE) பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்புகளை தொடர்வதற்கு இந்த வசதியை பெற்றுக் கொள்ள முடியும். கல்விசார் மற்றும் நிபுணத்துவ சிறப்பை நாடும் மாணவர்களின் பரந்தளவு தேவைகளை நிவர்த்தி செய்வதற்கு நெகிழ்ச்சியான மற்றும் சகாயமான நிதிசார் உதவியை வழங்கி தரமான கல்வியை பெற இந்த கைகோர்ப்பு பங்களிப்பு வழங்கும்.

இந்தப் பங்காண்மையின் பெறுபேறாக, மாணவர்களுக்கு தமது MBA, MSc, LLM மற்றும் பட்டப்படிப்பை தொடர்வதற்கு BIBM இல் இணைந்து கொள்ள அமானா வங்கியின் கல்வி நிதிவசதியளிப்பை ரூ. 5 மில்லியன் வரை பெற்றுக் கொள்ள முடியும். ஐந்து வருடங்கள் வரை நெகிழ்ச்சியான மீளச் செலுத்தும் தவணைகளுடன், போட்டிகரமான தவணைகள் மற்றும் மாணவர்களுக்கு தமது பெற்றோருடன் இணைந்து மீளச் செலுத்தும் தெரிவு போன்ற பல வசதிகளை வழங்குகின்றது.




இந்தப் பங்காண்மை தொடர்பில் நுகர்வோர் வங்கியியல் மற்றும் சந்தைப்படுத்தல் உப தலைவர் சித்தீக் அக்பர் கருத்துத் தெரிவிக்கையில், “Bristol Institute உடன் கைகோர்த்து, மாணவர்களுக்கு தமது கல்விசார் இலக்குகளை எய்துவதற்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க முடிந்துள்ளதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். நெகிழ்ச்சியான மற்றும் சகாயமான நிதிவசதி தீர்வுகளினூடாக தரமான கல்வியை பெற்று அடுத்த தலைமுறை நிபுணர்களை ஏற்படுத்துவதற்கான வலுவூட்டலாக இந்தத் திட்டம் அமைந்துள்ளது.” என்றார்.

Bristol Institute இன் பிரதம செயற்பாட்டு அதிகாரி தில்ஷாத் ஜிஃப்ரி கருத்துத் தெரிவிக்கையில், “அமானா வங்கியுடனான இந்த பங்காண்மையினூடாக, எமது மாணவர்களுக்கு நிதிச் சுமை தொடர்பில் கவலையின்றி தமது கல்வியை தொடர்வதில் கவனம் செலுத்துவதற்கு வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. கல்விசார் மற்றும் நிபுணத்துவ வெற்றியை ஏற்படுத்திக் கொடுப்பதில் நாம் காண்பிக்கும் அர்ப்பணிப்புக்கு கிடைத்த சாதகமான அம்சமாக இது அமைந்துள்ளது.” என்றார்.

சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட தகைமைகளுடன் தமது தொழில் வாழ்வை மேம்படுத்திக் கொள்ள எதிர்பார்க்கும் மாணவர்கள் மற்றும் நிபுணர்களுக்கு தற்போது இந்த பிரத்தியேகமான கல்வி நிதிவசதியளிப்பு தீர்வை பெற்றுக் கொள்ள முடியும். வங்கியின் ஒன்லைன் நிதிவசதியளிப்பு போர்டலான https://www.amanabank.lk/personal/financial-support/education-finance.html ஊடாக வாடிக்கையாளர்களுக்கு விண்ணப்பிக்க முடியும் அல்லது எந்தவொரு அமானா வங்கிக் கிளைக்கும் விஜயம் செய்து அல்லது BIBM பிரதிநிதி ஒருவருடன் உரையாடி பெற்றுக் கொள்ள முடியும்.

இலங்கை மத்திய வங்கியின் அனுமதி பெற்று இயங்கும் நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனமாகவும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட நிறுவனமாகவும் அமானா வங்கி பிஎல்சி திகழ்கின்றது.

ஜித்தாவை தளமாகக் கொண்டியங்கும் IsDB குரூப் பிரதான பங்காளராக திகழ்கின்றது. IsDB குரூப் ‘AAA’ தரப்படுத்தலை தன்வசம் கொண்டுள்ள பல்தேசிய அபிவிருத்தி நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனமாக திகழ்வதுடன், 57 நாடுகளில் அங்கத்துவத்தைக் கொண்டுள்ளது. வட்டிசாராத வங்கியியல் மாதிரியை கொண்டுள்ள அமானா வங்கியை, உலகின் உறுதியான 50 இஸ்லாமிய வங்கிகளில் ஒன்றாக ஏசியன் பாங்கர் அமைப்பினால் தரப்படுத்தப்பட்டிருந்தது.

அமானா வங்கி எவ்விதமான துணை அல்லது இணை நிறுவனங்கள் எதனையும் கொண்டிருக்கவில்லை என்பதுடன், அநாதரவான சிறுவர்கள் காப்பக அமைப்பான OrphanCare நம்பிக்கை நிதியத்தின் ஸ்தாபக அனுசரணையாளராக தனது ஈடுபாட்டை பேணி வருகின்றது.

அமானா வங்கி மற்றும் Bristol Institute of Business Management (BIBM) ஆகியவற்றுக்கிடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை பரிமாற்றம்

இடமிருந்து: ரியாஸ் நூர் – அமானா வங்கியின் நிதியளிப்பு பிரிவின் தலைமை அதிகாரி, தில்ஷாத் ஜிஃப்ரி – பிரதம செயற்பாட்டு அதிகாரி Bristol Institute, யாதவ் பிரசாத் – முகாமையாளர் (விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல்) Bristol Institute.

## மனநலமும் ஆலோசனையும் 68

# ஒருபோதும் கைவிடாதே

"ஒருபோதும் கைவிடாதீர்கள்" என்று பலர் சொல்லக் கேட்கிறோம்.

இதன் பொருள் என்ன? நாம் ஒன்றை செய்ய ஆரம்பித்தால் அதை இடையே விட்டு விலகாமல் அதை அடையும் வரை அதற்காக உழைப்பதை இது குறிக்கிறது. ஒருபோதும் கைவிடாதீர் என்பதன் உட்கருத்து என்னவேண்றால்.. நாங்கள் தோல்வியை அல்லது பின்னடைவை சந்திக்கும் போது விட்டு விலகுவது நல்லது என்று மனம் நினைக்கையில் மீண்டும் ஒரு முறை முயற்சி செய்வோம், முன்னோக்கி நகர்வோம், என்று மனவுறுதியுடன் கைவிடாமல் முன்செல்வதாகும்.

இங்கு நாம் புரிந்துகொள்ள வேண்டிய முக்கிய விடயம்... வெற்றி அவ்வளவு எளிதாகவும் விரைவாகவும் வருவதில்லை. வெற்றி என்பது கடின உழைப்பு, தோல்விகள், வலிகள், தடைகள் போன்ற பலவற்றுடன் வருகிறது.

நாங்கள் எங்கள் கனவுகளை நோக்கி வேலை செய்யத் தொடங்கும் போது எதிர்பாராத பல தடங்களை, சவால்களை சந்திக்க வேண்டி இருக்கும்.

அப்போது முன்னேறுவது கடினமாக இருக்கும். அந்த நேரத்தில் ஒருபோதும் விட்டு விலக நினைக்கக் கூடாது.

ஒருபோதும் விட்டுக்கொடுக்காத மனப்பான்மையுடன், பயத்தை, பதற்றத்தை எதிர்மறை எண்ணங்களை நம் மனதில் இருந்து அகற்றி வெற்றியை நோக்கி நகர வேண்டும்.

வாழ்க்கையில் நாம் விரும்பும் சில விடயங்கள் இலகுவாக கிடைக்காமல் போகலாம். ஆனால் நாம் ஒருபோதும் கைவிடக்கூடாது. எமது கனவை நோக்கி தொடர்ந்து பணியாற்ற வேண்டும், ஒரு நாள், நாங்கள் அதை அடைவோம். ஒருபோதும் கைவிடாதீர் என்று சொல்லப்படுவதற்கான காரணம் இதுதான்.

உங்களை கீழே இழுக்க முயற்சிக்கும் பல தடைகள் உங்கள் வாழ்க்கையில் இருக்கும். ஆனால் அந்த தடைகளை எதிர்கொண்டு வாய்ப்புகளை உருவாக்க முயற்சிக்க வேண்டும்.

தருணம் வரும்போது, அதை இரண்டு கைகளாலும் பிடித்துக்கொண்டு கனவை நோக்கி பறக்கும் பறவைகளாக நாம் ஆக வேண்டும்.

எங்களில் பலருக்கு தொழில் தொடங்குவது, விளையாட்டு வீரராக ஆகுவது, முகாமையாளராக இருப்பது போன்ற கனவுகளும் இலக்குகளும் இருக்கும்.

ஆனால் இந்த இலக்குகளை அடைவது எளிதல்ல. முயற்சியும் மன உறுதியும் அடைவேன் என்ற நம்பிக்கையும் இருந்தால் அது எளிதாகிவிடும்

ஆரம்பத்தில் எங்கள் இலக்குகளுக்கு நாங்கள் நிறைய கடின உழைப்பையும் நேரத்தையும் செலவிட வேண்டி வரும். காலம் போக்கப் போக அது இலகுவாக ஆகிவிடும்.

ஆனால் நாங்கள் ஒருபோதும் கைவிடக்கூடாது. மூங்கில் மரத்தைப் போலவே, நாங்கள் ஒரு நிலையான அடித்தளத்தை உருவாக்க வேண்டும்.

அடித்தளம் வலுவாக இருந்தால், நாங்கள் மூங்கில் மரத்தைப் போலவே வளர்ந்து எங்கள் இலக்குகளை அடைவோம்.

முதல் வருடங்களில், மூங்கில் வலுவான அடித்தளத்தை உருவாக்க நிலத்தடியில் அதன் வேரை வளர்த்துக் கொண்டிருந்தது.

மரம் வலுவான அடித்தளத்தை உருவாக்கவில்லை என்றால், அது அதன் வளர்ச்சியைத் தாங்க முடியாமல் உடைந்து விழுந்த விடும். எனவே, அதே கொள்கை எங்கள் வளர்ச்சிக்கும் வாழ்விற்கும் பொருந்தும்.

எனவே தரமான வெற்றிக்கு சொந்த கொண்டாட நாம் முதலில் வலுவான தளத்தை உருவாக்க வேண்டும்.

எங்கள் நேரத்திற்காக காத்திருப்பதையும் முயற்சிப்பதையும் ஒருபோதும் கைவிடக்கூடாது.



**அஸ்ஹர் அன்ஸார்** FRSPH (UK)
**மனோதத்துவ ஆலோசனை நிபுணர்**
**மனோதத்துவ எழுத்தாளர்**

பயாஸா பாஸில்




# ஒரு கிரீடத்தில் இருக்கும் இரண்டு வைரங்கள் - பெற்றோர்

- றஜா முஹம்மத் -

அவனுடைய எல்லா சிரிப்பிலும் ஏதோவொரு சிந்தனையும் கலந்தே இருக்கும். அதை அவனால் தாங்க முடியாத போது வெளிக்காட்டுவான். ஏனென்றால், நீங்கள் இதை நினைத்து வருந்தக்கூடாது. அத்தோடு, உடையக் கூடாது என்பதற்காக.

அவனுடைய எல்லா மகிழ்ச்சியிலும் ஏதோவொரு பரபரப்பு கலந்தே இருக்கும். தெரியாமல் உங்களுக்கே உரித்தான வேலியாகி பலத்த பாதுகாப்பை அளித்திடுவான்.

அவனுடைய எல்லா ஓட்டத்திலும் உங்களது உணர்வுகளில் உள்ள சீற்றத்தையும் சீராக்க வேண்டும் என்ற கருணையிருக்கும். நீங்கள் அவனை எப்படி நினைத்தாலும், உங்களது எல்லா உணர்வுகளையும் மதித்து நடக்க பெரும் முயற்சிகளை செய்வான்.

அவனுடைய எல்லா பரபரப்புக்குமுரிய காரணத்தை நான் சொல்லவில்லை இல்லையா? அவன்கள் அதனை அவள்களிடம் சொல்வதில்லை. அவன்களால் தாங்கி கொள்ள முடியாத தருணங்களில் அவளினுடைய மடி மீது சாய்ந்து கதை பேசுவான் பாரம் குறைந்தது போன்று உணர்வான் அவன்.

தனக்குள் நெருப்புக் குழம்பை வைத்துக்கொண்டு அவள்களுக்கு குளிர்ச்சியை மட்டும் கொடுக்கும் அதை அந்த நேரத்தில் அல்லாது வேறொரு நேரத்தில் வெளிக்காட்டுவான். ஏனென்றால், நீங்களாவது இந்த மகிழ்ச்சியில் முழுமையாக நனைய வேண்டும் என்பதற்காக.

அவனுடைய எல்லா கவனிப்பிலும் உங்களை பாதுகாக்க வேண்டுமென்ற பயம் எப்போதும் கலந்திருக்கும். அது உங்களோடு கோபமாக இருந்தாலும், உங்களுக்கு வேலைப்பாடுகளிலும் உங்களுக்கு நேரம் தந்து பேச வேண்டுமென்ற பெரு ஏக்கமிருக்கும். நீங்கள் அவனோடு இப்போதெல்லாம் இரக்கமே இல்லையென்று சண்டையிட்டாலும், உங்களது குழந்தைத்தனத்தை அறிந்த அவன் அமைதியாய் உங்களை அரவணைத்து நெற்றியில் முத்தமிடுவான்.

சிரிப்பிலிருக்கும் சிந்தனைக்கும் மகிழ்ச்சியிலிருக்கும் வல்லவர்கள். இவர்களையே சரிதம் சதாவும் ஆண் தேவதைகள் என்று சிலாகித்து பேசுகிறது.

அவன் என்பது உங்களது தந்தையாகவோ, கணவராகவோ, மகனாகவோ, எப்படியோ ஒரு மைந்தனாக இருக்கலாம். அவன்கள் இந்த உலகின் அழகிய ஆச்சரியங்கள். மீண்டும் சொல்கிறேன்,

நன்றாக கவனித்துப் பாருங்கள்!




அண்மையில் சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் முதலாவது பேராசிரியராக பதவி உயர்வு பெற்ற கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி வானதி பகீரதன் நிறுவகத்தின் மொழிகள் கற்கைகள் அலகினால் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார். இதில் விரிவுரையாளர்களான இரகுவர சர்மா, மபாஸ் சனுான், தர்ஷனீ கேதீஸ்வரன், துளசி வந்தனா உதயசங்கர் என்போர் பேராசிரியையக்கு நினைவுச் சின்னம் வழங்குவதனையும் அலகின் விரிவுரையாளர்கள் இணைந்து எடுத்துக் கொண்ட குருப் படத்தையும் மேலே காணலாம்.

# பாணந்துறை இல்மாவில் முதலாம் தர மாணவர்கள் சேர்ப்பு நிகழ்வு




பாணந்துறை இல்மா வித்யாலயத்தில் முதலாம் தரத்தில் மாணவர்களை சேர்த்துக் கொள்ளும் கால்கோள் நிகழ்வு அண்மையில் மிக விமரிசையாக வித்யாலய வளாகத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

வித்யாலய அதிபர் ரஸ்மி மஹ்ரூப் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் , ஓமான் நாட்டு ஆடை உற்பத்தி நிறுவனமான "அல் - ஒபைதான்" எபரலின் நிறைவேற்று பணிப்பாளர் யாஸிர் லஹீர் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

நடந்து முடிந்த புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவ, மாணவிகளுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

### சபாநாயகர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாராளுமன்ற சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்னவை கடந்த வியாழக்கிழமை (30) பாராளுமன்ற வளாகத்தில் சந்தித்தார். பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீரவும் இச்சந்திப்பில் கலந்துகொண்டார்.

இந்தக் கலந்துரையாடலில் இலங்கைக்கும் துருக்கிக்கும் இடையிலான நீண்டகால இருதரப்பு உறவுகளின் முக்கிய அம்சங்கள் குறித்து சபாநாயகரும் தூதுவரும் கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டனர்.

### அரகலய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரூபா பெற்ற 43 எம்.பி.க்களின் பெயர்கள் அடங்கிய பட்டியல் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

இதில் ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்தத் தொகை ரூபா. 122 கோடிகள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



அரபாத் பஹுர்தீன்

# இளையோர் மகளிர் ரி20 உலகக்கிண்ணம்
# 2ஆவது முறையாகவும் மகுடம் சூட்டியது இந்தியா

ஐ.சி.சி இளையோர் மகளிர் ரி20 உலகக் கிண்ண தொடரின் இறுதிப் போட்டியில் தென்னாபிரிக்க அணியை 9 விக்கெட்டுக்களால் மிக இலகுவாக வீழ்த்திய இந்திய இளையோர் அணி 2ஆவது முறையாகவும் சம்பியன் மகுடத்தை தனதாக்கி அசத்தியது.
19 வயதுக்குட்பட்டோருக்கான ஐ.சி.சி மகளிர் ரி20 உலகக் கிண்ணத் தொடர் கடந்த மாதம் 18ஆம் திகதி மலேசியாவில் ஆரம்பித்து இம்மாதம் 2ஆம் திகதி வரை இடம்பெற்றிருந்தது.
இத் தொடரில் மொத்தமாக 16 அணிகள் பங்கேற்றிருந்தன. முதல் சுற்று முடிவில் 4 அணிகள் வெளியேற 12 அணிகள் 2ஆம் சுற்றுக்குள் நுழைந்தன.
பின்னர் 2ஆம் சுற்று முடிவில் குழு நிலையில் முதல் இரு இடங்களைப் பெற்ற 4 அணிகள் அரையிறுதிக்கு தகுதி பெற்றன. அந்த வகையில் முதல் அரையிறுதி போட்டியில் அவுஸ்திரேலிய அணியை வீழ்த்தி இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது தென்னாப்பிரிக்க அணி.
தொடர்ந்து இடம்பெற்ற 2ஆவது அரையிறுதி போட்டியில் இங்கிலாந்து அணியை மிக இலகுவாக வீழ்த்திய இந்திய அணி மீண்டும் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்று அசத்தியது.
இந்நிலையில் கடந்த 2ஆம் திகதி விறுவிறுப்பான இறுதிப்போட்டி மலேசியாவின் கோலாலம்பூரில் ஆரம்பித்தது. இதில் நாணயசுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாப்பிரிக்கா இளையோர் மகளிர் அணி 20 ஓவர்கள் முடிவில் 82 ஓட்டங்களைப் பெற்று சகல விக்கட்டுக்களையும் இழந்தது.
தென்னாப்பிரிக்கா சார்பில் அதிகபட்சமாக வோன் வூர்ஸ்ட் 23, ஜெம்மா போத்தா 16 ஓட்டங்களை எடுத்தனர். பந்துவீச்சில் கொங்கடி த்ரிஷா 3 விக்கெட்டுகள் எடுத்தார்.
83 ஓட்டங்கள் என்ற இலக்காக வெற்றி இலக்கினை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய இந்திய அணி வெறும் 11.2 ஓவர்களில் ஒரு விக்கெட்டினை மட்டுமே இழந்து 84 ஓட்டங்களைப் பெற்று 9 விக்கெட்டுக்களால் மிக இலகு வெற்றியை பதிவு செய்ததுடன் சம்பியன் மகுடத்தையும் தனதாக்கி அசத்தியது.
துடுப்பாட்டத்தில் கொங்கடி த்ரிஷா 33 பந்துகளில் 44 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார். சானிகா சால்கேவும் 26 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தார்.
நடப்பு சாம்பியனான இந்தியா தொடர்ந்து 2அவது முறையாகவும் இளையோர் ரி20 மகளிர் உலக் கிண்ணத்தை வென்று சாதனைப் படைத்துள்ளது.

# திமுத்திற்கு பிரியாவிடை கொடுக்க மைதானத்துக்கு வாருங்கள்
## ரசிகர்களை அழைக்கும் மாலிங்க



அவுஸ்திரேலிய அணிக்கு எதிராக இடம்பெறவுள்ள இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டிக்குப் பின்னர், டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதற்கு இலங்கை கிரிக்கெட் அணியின் திமுத் கருணாரத்ன தீர்மானித்துள்ள நிலையில், குறித்த போட்டியை பார்வையிடுவதற்கு சகல கிரிக்கெட் ரசிகர்களும் செல்ல வேண்டும் என இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் லசித் மாலிங்க கோரிக்கை விடுத்துள்ளார்.
இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி காலியில் நாளை முற்பகல் 10 மணியளவில் ஆரம்பமாகவுள்ளது.
இந்த போட்டி திமுத் கருணாரத்னவின் 100வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியாகும். இந்நிலையில் நாளைய தினம் ஆரம்பமாகவுள்ள டெஸ்ட் கிரிக்கெட் போட்டியுடன் திமுத் கருணாரத்ன டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.
இது தொடர்பில் தமது சமூக வலைத்தள பக்கங்களில் காணொளி ஒன்றை வெளியிட்டுள்ள லசித் மாலிங்க, திமுத் கருணாரத்னவிற்காக நாளைய தினம் ஆரம்பமாகவுள்ள டெஸ்ட் கிரிக்கெட் போட்டியைப் பார்வையிடுவதற்குச் சகல விளையாட்டு ரசிகர்களும் ஒன்று கூட வேண்டும் என குறிப்பிட்டுள்ளார்.
அதேநேரம், இறுதி போட்டியில் திமுத் கருணாரத்ன சதத்தைப் பெறுவார் என தாம் எதிர்பார்ப்பதாகவும் லசித் மாலிங்க தெரிவித்துள்ளார்.

# நூறாவது போட்டியுடன் டெஸ்ட் கிரிக்கெட்டிற்கு விடை கொடுக்கிறார்
## திமுத் கருணாத்ன



இலங்கை டெஸ்ட் அணியின் முன்னாள் தலைவரும் , ஆரம்ப இடதுகைத் துடுப்பாட வீரருமான திமுத் கருணாரத்னே அஸ்திரேலிய அணிக்கு எதிரான நாளை (6) இடம்பெறவுள்ள இரண்டாவதும் இறுதியுமா டெஸ்ட் போட்டியுடன் ஓய்வு பெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.
36 வயதான திமுத் கருணாரத்னே தற்காலத்தின் இலங்கை அணியின் மிகச் சிறந்த ஆரம்ப இடதுகைத் துடுப்பாட வீரராக வலம் வருகிறார்.
இதுவரை இலங்கை அணிக்காக 99 சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் பங்கேற்று 7172 ஓட்டங்களைக் குவித்துள்ளார். இதில் 16 சதங்கள் மற்றும் 59 அரை சதங்களை விளாசி உள்ளதுடன், 39.40 என்ற துடுப்பாட சராசரியை தன்னகத்தே வைத்துள்ளார்.
மேலும் கடந்த சில டெஸ்ட் போட்டிகளில் திமுத் கருணாரத்னாவின் துடுப்பாட்டம் சரிவை சந்தித்து உள்ளது. இந்த நிலையில் அஸ்திரேலிய அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் முதல் இன்னிங்ஸில் 7 ஓட்டங்களையும், 2ஆவது இன்னிங்ஸில் டக்அவுட் ஆகியும் ஏமாற்றம் கொடுத்திருந்தார்.
இந்நிலையில் அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான இரண்டாவதும் இறுதியுமா டெஸ்ட் போட்டியுடன் 100 ஆவது சர்வதேச டெஸ்ட் போட்டிகள் என்ற மைல் கல்லை எட்ட இருக்கும் திமுத் சமீப கால சறுக்கல் காரணமாக இப் போட்டியுடன் சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறும் முடிவை அறிவிப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும் 50 சர்வதேச ஒருநாள் போட்டிகளில் திமுத் விளையாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.
அத்துடன் தற்போது 100 டெஸ்ட் போட்டிகளில் ஆடிய மன நிறைவுடன் ஓய்வு பெறும் முடிவை திமுத் எடுத்து இருக்கிறார். முன்னதாக அவர் டெஸ்ட் போட்டிகளில் 10,000 ஓட்டங்களை கடக்க வேண்டும் என்ற இலக்குடன் இருந்தார். அதற்கான முயற்சிகளிலும் ஈடுபட்டு வந்தார்.
அந்த இலக்கை அவர் எட்ட வேண்டும் என்றால் அடுத்த மூன்று அல்லது நான்கு ஆண்டுகளுக்கு தொடர்ந்து அதிக ஓட்டங்களை குவிக்க வேண்டும். ஆனால், தற்போது இலங்கை அணி அதிக டெஸ்ட் போட்டிகளில் ஆடுவதில்லை என்பதால் அவரால் அந்த இலக்கை எட்ட முடியாமலும் போகலாம்.



எனவே, நூறு டெஸ்ட் போட்டிகளில் ஆடிய திருப்தியுடன் விடை பெற இருப்பதாக அவர் சக இலங்கை வீரர்களிடம் தெரிவித்து உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.
மேலும் திமுத் கருணாரத்னவின் ஓய்வு குறித்து இன்னும் அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியாகவில்லை.
அவர் ஓய்வு பெற்ற பின் தனது குடும்பத்தினருடன் அஸ்திரேலியாவிற்கு இடம்பெயர உள்ளதாக கூறப்படுகிறமை குறிப்பிடத்தக்கது.

இப் பத்திரிகையானது (மின்னிதழ்) Moon Media Network நிறுவனத்தினால் 41/2, விஜித வீதி, நதிமால, தெஹிவளை எனும் முகவரியில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.